V 4 No. 29 ~~23~~ 23 July 1981

JL
M211, N28KN
N81.4.29
188927

57

KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931ஆம் ஜூலை மீ 23உ [No. 29

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 561
2. நவராத்திரி — ஓர் நாடகம்.
K. N. சுந்தரேசன் B. A. (Hons) 563
3. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-49—61)
K. இராமரத்நம் ஐயர் B.A. 565
4. ஊழ்வினையும் ஆள்வினையும்.
K. நாராயண ரெட்டிகாரு 567
5. யாப்பிலக்கணம் (செய்யுள்-வெண்பா ஓசை) 569
6. கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 571
7. அப்பர் (64-கலை-பரகாயப் பிரவேசம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 574
8. இழுதையர் தன்மை, பெரியோ ரியல்பு. 575
9. வர்த்தமானம். 579

கலாநிலயம்

அருமையினு மருமை.

3

சலசலப்பும் விதிர்விதிர்ப்பும் சாராமல் சுவையும் சோதியுமுடைய வாழ்க்கையி லிடையறுதொழிகி வெற்றியுடன் முற்றிநிற்றல் யாதினும் அரிதரிதென்பதைச் சென்றவாரம் செப்பலுற்றோம். அரியதாதலின், இதனை முயல்பவரே பெரியா ரெனத்தக்கவர். இவ்வண்ணம் முற்றுதற்கரியதாயதேனும் முயலப்பெறுகின்ற வாழ்க்கை நல்வாழ்க்கை எனப்படும். தீது புரியாமல் ஒழுகுதல்மட்டுமே நல்வாழ்க்கை எனற் குரியதாகும் என்றோர் பேதைமை பெரிதுடைத்து இவ்வுலகம். தீமை செய்யாததோடு நன்மையும் நடைபெறுகின்ற வாழ்க்கையே நல்வாழ்க்கை. அத் தீமை என்பதனையும் காமம் கள் கொலை களவு அனைய மா பாதகங்களோடு அடக்கிவிடுவார். இத்தீமைகளைச் செய்வதில்லையாதலின் நல்லவரே என்னற்குத் தாம் உரியவரென்று விளம்புவார் பலர்—(செய்ய நினைத்ததும் இல்லை என்று செப்பத்துணிவரோ என்று இவ்வயின் வினவ வேண்டா). இது நல்வாழ்வன்று; வெற்றுரை. தீமைசெய்வது பேய்க்குணமென்னினும் அது செய்யாமைமட்டுமே மானுடவாழ்வின் இலக்கணமாகாது. தீயோரை, மாயாமுன்னம் பேயானோர், என்னலாம். மற்று, தீதொழிவதுடன் தன் தொழிலெல்லாந் தீர்ந்துவிட்டவரைச் சாகாமுன்னர்ச் சவமானோர், என்னக் கூறுவது ஏற்புடைத்தாகும். வாழ்க்கைக் குயிர்நிலை எல்லோர்க்கும் நல்லனாயிருத்தல். இன்னணம் நோக்குங்கால், உடல்தான் நோயொன்றும் உறுதவிடத்தும், சனங்கள் நெடிதுநாட்களாய்ச் சாகக்கிடக்கின்றனர் என்று செப்பல்வேண்டும். உடல்நிலை யறிகின்ற நாடிகள் வேறு, வாழ்க்கைநிலை யறிகின்ற நாடிகள் வேறு. அன்பு அறம் என்னும் இவை இரண்டு நாடிகளும் கேடின்றித் துடித்திருத்தல் வேண்டும். அஃதில்லையேல் வாழ்க்கையி னுயிர் ஊன மடைந்துகொண்டுவருகின்றதென்பது திண்ணம். உயிர்வாழ்க்கை வேறு; வாழ்க்கையி னுயிர் வேறு. முன்னதற் காதாரமாயிருப்பது இரத்தம்; பின்னதற் காதாரமாயிருப்பது இரக்கம்.

எனின், வாழ்க்கையில் அதனுயிர் வைகுதற்குரிய வகைகள் நாடுவதின்றியே உயிர்வாழ்க்கைக் குரியவைகளிலேயே தம் நாட்டத்தைச் செலுத்திச் செலுத்தி இறுதியில் எல்லாம் நெடிதுநாள் சாகக்கிடந்த வெறுமையே எஞ்சுவது காண்கின்றோர். வாலறுந்த நரியின் கதை வம்பன்று—இவர்களும் பலப்பல சீர்திருத்தங்கள் செய்யவருகின்றனர். காமம் கள் கவறு அனைய பெருந்தீமைகளைப் பழித்தழிக்கவேண்டுமெனப் பலவாறு முன்னுக்கு வந்து முயல்கின்றனர். உண்மையில் இவை கொடியனவேனும், சனங்களின் மிகச் சிறுபகுதியினரே இவைகளாற் கேடுற் றழியநேர்கின்றது. அவர்களும் இத்தீமைகளைப் புரிவது சிற்சில போதே. அனைவரையும் அறபதநாழியும் அழிக்கின்ற தீமைகளல்லவே இவை. எப்போதுமிருந்து எல்லோரையும் இடைவிடாது பீடிக்கும் குரூரம்மிகுந்த பலகொடுமைகளைப்பற்றியோ இச் சீர்திருத்தகாரர்களது குரல் மிகவுந் தணிந்து மாறிவிடுகின்றது—அழுக்காறு, வன்மம் இழிவுடைய பொய்கள், அதனினும் இழிந்த மவு

128925

...னம், பிறர்பழியை விளம்பவரும் மெய்ச்சொல், தமக்கு அடங்கியவர்களைத் தத்தம் கையாலான வளவு பெரும்பாடு படுத்துதல், குடும்ப வாழ்க்கையின் இன்பத்தைக் கொல்லும் விடமாம் 'சுடுமூஞ்சி'—இவைகளெல்லவோ வீடுதோறும் குடிப்புகுந்துறைந்து நல்வாழ்வு நிகழவொட்டாமல் நலிகின்ற நமன்களாய் நடமாடுகின்றன. இவைகளுங் கெட்டவைகள்தாம் என்று ஒவ்வுவார் அச்சீர்திருத்தகாரர்—ஆயினும், அவ்வளவு கெட்டவைகளுமல்ல வென்றொரு எண்ணம் எப்படியோ இவர் மனத்தில் எழுகின்றது.

உலகத்தைச் சீர்திருத்தம் செய்ய முற்பட்டு முயல்பவர்களில், சிற்சிலர் ஒழிய ஏனையோர் உண்மையில் நல்லெண்ண முடையவர்களே என்பதற்கையமில்லை. கள் காமம் போன்ற போகங்களின்பால் தூண்டுகின்ற அவாவானது அளவிறந்து பெருகுங்கால் உருப்பெற்றெழுந்து திரிகின்ற கொடுமைகள் அவர் கண்களில் நன்றாகப் படுகின்றன. இவர்களோ இப் போகங்களை இச்சிப்பதில்லை. இயலாமையாலேனும் விரும்பாமையாலேனும் நாம் பகிர்ந்துநுகராத போகங்களைக் காணுங்கால் சற்றேனும் அவைகளை நாம் பொறுக்கமாட்டாமையால், மற்றவர் நுகர்ச்சிக்கு அவை வாய்க்காதபடி கடியப்புகுகின்றவர் நம்மிற் சில ராகலாம். அல்லது, அழுக்காறினால் அவர்களை விலக்குபவர் ஆயினும் ஆகலாம். அல்லது, துயர்கூர்ந்திருக்கின்ற மனம் அவைகளை வெறுத்தழிக்க வேண்டுமென முயல்வதும் இயலும். அல்லது, களியாட்டங்களின் கலகலப்பையும் அலைச்சலையும் நாம் வெறுப்பதாலும் காமங் கள் கவறுதிகளைக் களைந்தெறிய வேண்டுபவ ராகலாம். அல்லது, மறுமைச்செல்வத்தை எய்துதற்கு இடையூறானவை இவையென்ற உணர்வினோடு, இம்மைப்பாரத்தைத் தாங்குதற்குரிய கருத்துக்களிலேயே ஆழ்ந்தவர்களாய், அவைகளை அகற்றவேண்டுமெனுங் கடமையைப் பூண்டவர்களு மாகலாம். எவ்வாறாயினும் நாம் வயதாகவாக, அயலார் இவ்வின்பங்களைவிழைந்து நுகர்வதைக் காணுங்கால் முகஞ்சுளிக்கத் தலைப்படுகின்றோம் என்பது திண்ணம். முன்னுரைத்த நோக்கங்களாலும், இன்னபல பிறநோக்கங்களாலும், சனங்களைச் சீர்திருத்தத் தலைப்படுவது நேரலாம் என்று யாம் எடுத்துக் காட்டிய இது, அன்பும் அறனும் இருந்து வளரும் வழியை நாடாமல், காமங் கள் அனைய தீமைகள் ஒழிவதற்கே பலர் முயல்வதற்கோர் காரணமாகலாம் என நினைக்கின்றோம்.

இது, அகத்தினின்றுய்க்கின்ற காரணம். இனி, அகத்தில் விளைவதோடு புறத்தினின்றுந் தூண்டுகின்ற காரணம் வேறொன்றுளது. அன்பும் அறனுமுடையவர்களாய் அமைதியில் அமர்ந்த வாழ்க்கையை ராபர்ட் லூயீ ஸ்டீவென்ஸன் குறித்த இலக்கணத்தின்படி வாழ்தலே நல்வாழ்க்கை யென்னும் நிரந்தர உண்மையை இச் சீர்திருத்தகாரர்களில் பலர் அறி[illegible] சிலர்க்கும் அதனைப் பிறர்எய்து[illegible]யாதென்பது தெரிவதில்லை. அதுவுமன்றி, அன்பு அறன் அமைதி முதலியவைகளுக்கு இடையூறு செய்யும் அவ்வியம் அவா சினம் ஆகிய பகைகளைத் தம்மால் அவித்தழிக்க மாட்டாமைகண்டு பிறராலும் அதுஆகாததென்னுங் கொள்கையால் முயன்றொன்றும் பயனில்லையென்று கைவிட்டுவிடுகின்றார். "என்னாலேயே இயலாதது பிறரால் இயலப்போகின்றதா!" என்றவோர் மாய எண்ணம், சிறியோர்முதல் பெரியோர்வரையில், இத்தகைய மானத சம்பந்தமான விடயங்களில், யாவரையும் சூழ்ந்திருப்பது இயற்கை. இவரோ, முயற்சியிலேயே பெருமையும் நன்மையும் உளவென்பதை ஓராது, அன்பும் அறமுமே உயிர்நிலையாய் வாழ்வதேனும் வாழவைத்தலேனும் இயலாதாதலின் அதனில் ஈடுபடுவதிற் பயனில்லை எனப் பயந்துவிடுகின்றனர்.

இதனைச்சார்ந் தியக்குகின்ற காரணம் மற்றொன்றுமுளது. அவாக் கொள்ளேல், பகை பாராட்டேல், சீற்றமுற்றிடேல், அளித்திடு அன்போடிரு அமைதியைக் கையாள்வாய், என்னு மின்னவைகளைச் சொல்லத்தானியலும். அச்சொல் செல்லாவிடத்துப் பிறர் அவ்வழி ஒழுகுமாறு வற்புறுத்திச் செய்விக்கும் வகையில்லை. ஆதலின் இம்மொழிகளின் பயனைக் காண்பது அரிதாகிவிடுகின்றது. எனின், இவைகளில்முனைந்தவர் விரைவிற் கையற்று நிற்க நேர்தலும் இயற்கையே. மற்று, காமம் கள் கவறு அனையவைகளோ, புறத்தினின்று ஓர் இடையூறுசெய்து தடுக்கவல்லனபோல் தோன்றுந் தன்மையன. சட்டத்தின் தண்டனைகளால், கள்ளருந்து மிடங்களும் கவறாடுமிடங்களும் பொதுமடந்தையர் வீடுகளும் இல்லாமற் செய்யலாம் என்றுஎண்ணுவது இயல்கின்றதாதலின், இயற்றவல்லவைகளில் முயல்வதே மதியின் திறமெனக்கொண்டு ஊடாடுகின்றார் பலர்.

சீர்திருத்தகாரர்களது நோக்கங்களும் அவர்தமை இயக்குங் காரணங்களும் எவையாயினும் ஆகுக. அவர் உய்த்துணர்தற்குக் காத்திருக்கும் உண்மைதான் முக்கியமானது. கள்ளருந்தார், காமப்பரத்தையரைக் கண்ணெடுத்தும் பாரார், களவாடார், கவறு கைக்கொள்ளார், எனினும், கண்ணோட்ட மின்மையால் எத்தனை வீடுகள் புலிகிடந்த தூறாய்விடுகின்றன; தாமும் பிறரும் அன்பும் அறனும் உடையவராக முயல்வதே செயற்கரிய கருமங்களில் மிகப் பெரிது என்பதோராமல், அது மிகவும் அற்பமானதென்றும் தம்முடைய வீரத்திற்கு அம்முயற்சி பற்றாதென்றுங் கருதி வாழ்க்கைப் பிணியைத் தம் சீர்திருத்த வாளினால் வெட்டியறுக்க முற்படுகின்றனர். ஏற்ற செய்கை இதுவன்று; வாழ்க்கையொடு வழிநடந்து உழைக்க வேண்டிய தொழிலோ மிகவும் நுண்ணியது. அதற்கு வேண்டிய வீரமோ எல்லையற்ற பொறுமை. வாழ்க்கை பலவகைகளில் பிணிப்புண்டு கிடக்கின்றது. இம்முடிச்சை அறுத்துத் தீர்ப்பது என்பதில்லை — ஒவ்வொன்றை[illegible]த்தனி அவிழ்த்தல் வேண்டும்.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[544-வது பக்கத் தொடர்ச்சி]

இங்:—அன்னை வரின்—அன்னை வரின்—

காமா:—இறந்து மறைந்தவள் எப்படி வருவாள்—பைத்தியமே!

இங்—இறந்தவர் இறந்தே போவரோ—இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருவதில்லையோ?

துரை:—ஆம், இறந்தவள் சிறுகுழந்தையாய் இப்போது பிறந்தாள்.

இங்:—எப்போது ?

காமா:—இப்போது கொடுத்தோமே, அந்த இரப்பர் பொம்மை!

இங்:—இரப்பர் பொம்மையாய்ப் பிறந்தாளா? எந்த மலடி வயிற்றிலே?...அதோ அங்குப்பிறந்திருக்கிறாள்!

ராஜீ:-மரமேறிவிட்டான் அவன்! கைக்குக் கொம்பு எட்டாமல் உலுக்க நேரிட்டால் கீழே நானிருந்து எடுத்துக்கொண்டுபோய்விடுகிறேன்...

[இடதுபுறமாய்ச் சைகிளில் மறைகிறான்]

தியா:—குஞ்சுவே குஞ்சு!

காமா:—நாற்பது வயதுக் கிழவன் அந்தப் பொம்மை மோகமாய் முள்ளுக்கஞ்சாமல் இலந்தைமர மேறியிருக்கிறான்! சிறுமி இவள் வயதுக்கேற்ப நடந்தொழுகாமல்...அம்ம! தெய்வமே!!

ஒரு குரல்:—"ஆதி! ஆதி!! ஆதிமூலம்!"

இங்:—(சிரித்துக்கொண்டே) அதுவே அம்மா குரல்!

தியா:—இல்லை—பொய்—உருமபிள்ளையின் குரல் அல்லவா அது ! நம்பாதே!

இங்:—பொய்யும் மெய்யும் நேரெதிரே—

[இடப்புறத்தில் மறைகையில்]

அதோ, மெய்க்குரல் கேட்கிறதே !

காமா:—மாயாண்டி இறங்குகிறான்—சாமியாரே—உங்கள் பொம்மையில் மாயமில்லாமலில்லை! பலிக்கும் பலிக்கும் ! இனிக்கவலைவேண்டாம்—பின் ஏன்உருமபிள்ளை இந்தப்பக்கமாய்க் குரல்காட்ட அவள் அந்தத்திசை செல்கிறாள் ? பொம்மையின் பெருமையே! இனிமேல்...அந்த மூலிகையைத் தேடி...

குரல் :—அதோ குஞ்சு ! குஞ்சு ! பிடியுங்கள் !

காமா :—இத்தனைநேரம் இங்கிருந்துதான் அங்குப் போகின்றாளிப்போது. ரப்பர் பொம்மையைத் தூக்கி எறிந்துவிட்டுப் பிறகு எடுக்கச் செல்கிறாள் !

உரு :—(தோன்றி) கொடுக்கவேண்டா மிதை என்றேன். பல்லால் கிழித்தெறிந்து பாழ்செய்துவிடுவாள் என்றேனே !—கேட்டீர்களா ?

காமா :—எச்சில்பண்ணும் பழக்கம் அவளிடம் கிடையாது. கடிக்கமாட்டாள்—சாக்கிரதையாய் வைத்துக்கொள்வாள்.

உரு:—சரி-எனக்கென்ன ?—ஐந்து ரூபாயை வீண் செய்வானேன் என்பதே என் கருத்து ; கேட்கவில்லை இனிமேல் !

தியா :—சட்டையை மாற்றியாயிற்று—இனிப் பயமில்லையே. வருகிறாயா போலீசாரிடம் !

காமா:—குஞ்சுதான் வந்துவிட்டாளே—சுபத்திரையைத்தான் காணோம்—அதைப்பற்றி எனக்கென்ன கவலை ?

உரு:-அப்படியா! ஒரு பேதைப் புனிதப் பெண்ணை இவன் கையில் விடுவதா—நம்நலமே நாம்கருதுவதா—தீங்கு எங்கெங்கெல்லாம் தலை காட்டுகிறதோ அங்கங்கே மோட்டாரை ஓட்டித் தெருவை ஒழுங்காக்க வேண்டாமோ?

துரை:—ஆம்! ஆம்—அதுவே! இதோ மூலிகையைத் தேடிக் கொண்டுவருவோம் !

[வானத்தில் இடி இடிக்கிறது]

காமா:—பாழும் மழை! ஐயையோ! மேகங்கள் எழுந்து பரக்கின்றவே...சீக்கிரம்...

உரு:—மழை வருமா ?—வெயில் அடித்ததே !

தியா:—இடி இடித்ததே; காதில் படவில்லையா ?

உரு:—மீண்டும் பொய்யா ? முன்போல்...போய்ப் பார்க்கிறேன்-மீண்டும் பெட்ரோல் கொட்டி யிருக்கின்றதோ என்னவோ ? சாமியாரே மழை வருமோ ?

துரை:—(வானைப் பார்த்து) வரலாம்! (எழுகிறான்)

காமா:—சீக்கிரம்! சீக்கிரம் !...

உரு:—பாழும்மழை. தெருவெல்லாம்சேறு-வண்டி முழுதுஞ் சேற்றுப் பூச்சு—எனக்கு வேலைவைக்கத்தான்...அழகாய் மாலை மேகங்கள் பொன் திகழ்ந்து மகிழ்விக்காமல் நம்மை...பூட்சையும் தொப்பியையும் நனைத்துப் பாழாக்க...

தியா:—என்னைப் போல்....காலும் தலையும் உடலும் என் எளியஉடையில் அழகாக...

காமா :—வண்டியை லாயத்துக்குள் கொண்டுபோ..

உரு :—சாமியார் திரும்பிப் போகவேண்டுமே...

காமா:—சரி...சீக்கிரம் வாருங்கள்—நானும் காரியமாய்ப் போய் வந்துவிடுகிறேன், சீக்கிரம் !

[மச்சேறுகின்றா]

துரை :—வரும்போது தென்பட்டதுபோல் தோன்றிற்று.—மூலிகை இதோ கொடியில் கொணர்ந்தேன்!

[இடப்புறத்தில் மறைகிறான்]

காமா :—நானும் வரட்டுமா ?

[இடி இடிக்கிறது]

இடியா இது ? வெடிகுண்டு எறிகிறார்கள்—பெண்பால் என்னைக் கொலைசெய்ய. ராஜா ஊரிலில்லாத சமயம் பார்த்து !—உருமபிள்ளை— வா நீ—கொண்டலிடியல்ல—கொலை வெடி—துலுக்கனிடம் தனியே என்னைவிட்டுச் சென்றுவிட்டீர்களே

[அங்குமிங்கும் அலைந்து]

மாயாண்டி ! டே ! உருமபிள்ளை !

[உள்ளே ஓடுகிறான்]

தியா :—பேஷ் ! பேஷ் ! எனது சாமான்களை எடுத்தேகுகிறேன்; சமயமிதே...சீ, வேண்டாம்; பறிமுதல் செய்த சொத்து....அவனறையில் போய்ச் சோதனை போடுவோம். அதுவே வேலை யிப்போது !

[மாயாண்டி இடப்புறத்தில் வருகிறான்]

மாயா:—அம்மா கூப்பிட்டார்கள்! எங்கே? உருமபிள்ளை எங்கே? சங்கதி தெரியவில்லையே!

தியா:—தெரியாம லென்ன? ஆனால் உண்மை தெரியவில்லை—இனி உன்னை அறையமாட்டான்—அறைந்து அறைந்து அவன் கைகளே அறுந்துவிட்டன...

மாயா:—மோட்டாரையே சாட்டையால் அடித்தானே—என் எண்ணெயை வாந்தி எடுத்துவிட்டது? கைவலி யதனாலோ!

தியா:—உன்னைத் தப்புவித்தேன், நீ வாக்களித்தது போல் அந்த அறையைக் காட்டு!

மாயா:—அதோ அங்கே வாருங்கள்! (புறப்பட)

தியா:—வரவேண்டாம், ஊகித்துக்கொண்டேன்—ஒன்று சொல்கிறேன், அதன்படி செய்வாயா?

மாயா:—ஆகட்டும் என்று அப்பொழுதே சொன்னேனே! ஆனால் என்னை இராப்பள்ளிக்கூடத்துக்குப் போகச் சொல்லாதேயுங்கள்! சண்டை சச்சரவுகள் அங்கே சொல்ல முடியாதாம்.

தியா:—(சிரித்து) அவைகளை என் கன்னத்திற்கு மாற்றிவிட்டுத் தென்னாலிராமன் போல் நீ காட்டும் நன்றி இப்படியா!

மாயா:—எங்களூரிலே பஞ்சாயத்து ஏற்படுத்திச் சென்றான் ஒருவன்!

தியா:—யார்? (சிரிக்கிறான்)

மாயா:—யாரோ என்னவோ சொல்லிக் கொண்டார்கள்!

தியா:—நீ அவனைப் பார்த்ததில்லையா? (சிரிக்கிறான்)

மாயா:—கவண்டன்களுக்குப் பிரசங்கம் செய்தவனும்! ஆனால் நான் உழுதுகொண்டிருந்தேன்—மழை இன்று வரும்போலில்லையா? சாமி!

தியா:—சாமி என்கிறாய், துலுக்கன் என்கிறாய் —நானும் அவன்போல்-அவனுக்குத் தம்பியோ, அண்ணனோ!

மாயா:—சாமி! சாமி! அப்படிச் சொல்லமாட்டேன் உங்களை—பஞ்சாயத்தைப் பற்றிக் கேட்டீர்களோ, கதையை?

தியா:—நீ ஒரு பஞ்சாயத்தாரா?

மாயா:—நானிருந்தால் அப்படி நடக்குமா? என்னைத்தான் தேர்ந்தெடுப்பரா—உள்சண்டைகளும் சல்லியங்களும் கட்சிகளும் கசப்புக்களும்...நீங்கள்வந்து பாருங்கள்.

தியா:—என்ன — சொல்...ஊரிரண்டுபட்டால் பஞ்சாயத்தார் பிழைக்கலாம்! கணக்கிலாக் கொடுமைகளா?

மாயா:—பட்டா நிலங்களில் புல்லறுக்கக் குத்தகைக்குவிட்டு—எங்கள் வரம்பினோரத்தில் புல் அறுக்கிறேன் என்று பயிர்களையே அறுத்து வருகின்றனர் பகைக்கட்சியார்—வாழை இலைகள் சருகுகள் அறுக்கவும் குத்தகைவிடப்போகிறார்களாம்—குத்தகைக்கு விட்டுப் பின்னே தாறுகளையும் அறுப்பார்.

தியா:—பஞ்சாயத்துச் சட்டப்படி இந்த உரிமை பஞ்சாயத்துக்கே கிடையாதே ... அக்கிரமம்! முழு அக்கிரமம்!!

மாயா:—ஏதோ பதினெட்டாமே!—

தியா:—ஆடி பதினெட்டா?

மாயா:—செக்சன் பதினெட்டாம்! குத்தகை விட்டார்களாம்.

தியா:—18-ம் ஸெக்ஷனா—மேலதிகாரிகளைக்கேட்காலாமோ, ஊரார்க்கு முன்னர்த் தெரிவிக்காமலே செய்ய இச்சுதந்திரம் கிடையாது—நான் வந்து சொல்லி...

மாயா:—பஞ்சாயத்தைக் காற்றில் பறக்கவிடுங்கள்!

தியா:—இந்தப் பஞ்சாயத்தும் மோசடியா? முதலில் இதை ருசுவாக்குகிறேன். மாயாண்டி, இங்குவா, மோட்டார் வண்டியில் ஒரு சூஸ்திரம் காட்டுகிறேன், திருப்பினால் விளக்குகள் பளீச்சென ஒளிபாய்ச்சும்!

மாயா:—தெரியுமே எனக்கு — காட்டட்டுமா?
(இடப்புறத்தில் ஓட)

தியா:—சரி—நான் ஆபீசறை வழியாய்ச்சென்று, உருமபிள்ளை அறையருகே, அந்த வெளித்தாழ்வாரத்தில் நிற்பேன்—நான் கதவருகே நிற்கையிலே, மோட்டார் ஒளியை வீசு!

மாயா:—தெரியும்—ஆகட்டும்! எதற்காக?

தியா:—சிங்கத்தின் குகைக்கே சென்று பிடரியைப் பிடித்தாட்டு என்று தேசபந்து தாசர் சொன்னார். தயங்காமல் அங்கேயே சோதனையைப் போடச் செல்கிறேன்! கதவுகள் எல்லாவற்றையும் திறந்து வைத்திருப்பேன்—மத்தாப்பு விடுவதுபோல் விளையாட்டும் திறனுமாய்ச் செய் பார்ப்போம்......விளக்குக் கூட வேண்டாம். ஆனால் கார்மேகம் குவிந்து இருட்டிவிட்டதே—வீட்டில் அவனறையிலேயே விளக்குகள் இருக்கலாம்.

மாயா:—எப்பொழுதும் கிடையாது - இருட்டேதான்—விளக்கே ஏற்றுவதில்லை அவன்!—நான் காட்டுகிறே னிதோ.

தியா:—ஜாக்கிறதை—சுபத்திரையம்மாள் வந்தால் அங்குவந்து சொல்லு—நான் ஊருக்கு ஓடிவிட்டேன் என்று அவள் எண்ணமலிருக்கவேண்டும்.
[வலப்புறத்தறையில் மறைகிறான்]

மாயா:—சாமி, மழை எப்படிப் பெய்கின்றது என்று உங்களைக் கேட்க மறந்தேனே — வெள்ளைக்காரன் செய்யும் மாயமே மாயம்! பார்த்தால் புகைபோலிருக்கிறது. ரயில் வண்டியிலிருந்து புஸ்புஸ்ஸெனக் கிளம்பும்போது ஆகாயத்தில் முழுதும் மேகமாய் மாறி—நிலங்களுக்கு நீர்பாய்ச்சுவதற்காக—இத்தனை நாளாய் மேகங்களைப் பற்றி என்னவோ நினைத்திருந்தேன்... நாலைந்து மாதமாய் மழையே கிடையாதென்று பயிர்கள் வாடி வதங்கி எல்லாரும் ஏங்குகிறார்கள் என்று தெரிந்து, இங்கிருந் தனுப்பியிருக்கிறான் பார்! ஒரு இடி இடித்து மிரட்டுகிறான்! வெருண்டு புரண்டு ஓடுகிறது மேகம்! அடிக்கிறான் சாட்டையால்—காலால்லாடத்திலிருந்து தீப்பொறிகள் பறக்க ஓடுகின்றன... சாமி காத்திருப்பர்! போகிறேன்—(இடப்புறத்தில் மறைகையில்)

குபல்:—அவர்கள் எல்லாரும் போய்விட்டார்களா, பார்!

மாயா:—எவர்கள்! ஒருவருமில்லை இங்கே!
(காமு தாழ்வாரத்தில் தோன்றுகிறான்)

காமா:—வெடிகுண்டு போடும் சத்தம் கேட்டதே! கலகக்காரர்கள் பங்களாவிலே எங்கேயாகிலும் ஒளிந்திருக்கிறார்களா?—ஏன் இருட்டாயிருக்கிறது?

மாயா:—மழை வரப்போகிறது—
[இடி இடிக்கிறது]

காமா:—அம்மாடி (உள்ளே ஓடுகையில்)

மாயா:—இடிதான் அம்மா! பயப்படுகிறீர்களே!

காமா:—எனக்கும் நாற்பத்தைந்து வயதாகப்போகிறது, இது மாதிரி இடி கேட்டதில்லை நான்—மேகங்களே அவை; இடியாயிருக்கலாம்—என்ன இருட்டு!

மாயா:—விளக்கேற்றட்டுமா?

காமா:—ஆம், ஏற்று. சாமியாருக்கு வழி தெரியுமோ தெரியாதோ!

மாயா:—பளிச்சென ஏற்றுகிறேன் (இடப்புறத்தில் மறைந்திட)

காமா:—(உரக்க) குஞ்சு! உருமபிள்ளை!—சாமியாரெங்கே ஓடிவிட்டாரா? பாதையின் ஓரத்திலிருக்குமென்றாரே...

[பளீச்சென மோட்டார் வெளிச்சம் ஆபீசறைக்குள்ளும் வீசுகிறது,]

குரல்:—அந்த விளக்கை என்னிடம் கொடு—அம்மா எங்கே!

[குஞ்சு வலப்புறத்திலிருந்து ஓடிவருகிறான்]

அம்மாவைத் தேடுகிறேன்!

காமா:—மீண்டும் காணமற் போயிற்று? இருட்டில் இனி எப்படிக் கிடைக்கும்!

குஞ்:—அந்த விளக்கைத் தா என்னிடம்?

காமா:—அது மோட்டார் விளக்கு! கையால் எடுத்தாள முடியாது!— மோட்டாரிலேயேதானிருக்கும்!—தெரியாததுபோல் கேட்கிறாயே! மோட்டாருடன் பழகினதில்லையோ நீ.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[548-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச்சருக்கம்

286. ஆடலர் கொம்பனை யாரினை யாடவர்
பாடக மெல்லேர் பரவிய சீறடி
தோடலர் தொங்கலங் குஞ்சியுட் டோயவைத்
தூட லுணர்த்துந் தொழிலதொன் றுண்டே. 49.

ஆடு அலர் கொம்பு அனையாரின் - அசைந்தாடும் பூங்கொம்பைப்போன்ற தம் காதலியரின் ஊடலால், நை ஆடவர் - வருந்திய காதலர், பாடகம் - பாடகத்தையணிந்த, மெல் ஏர் பரவிய - மென்மையான அழகு நிறைந்த, சிறு அடி - அவருடைய சிறிய பாதங்களை, தோடு அலர் தொங்கல் அம் குஞ்சியுள் - பூவிதழ்கள் விரிந்த மாலையையணிந்த அழகிய தங்கள் மயிர்முடியின்மீது, தோயவைத்து - பதியும்படி வைத்து, ஊடல் உணர்த்தும் - அவருடைய புலவியைத்தீர்க்கும், தொழில் ஒன்று உண்டு - ஒரு தொழில் அங்கே (மிகுதியும்) உண்டு.

'ஆடவர் கொம்பனை யாரினை யாடவர்' என்ற பாடம் பொருட்பே றிலது.

---

287. சிலைத்தடந் தோளினர் செஞ்சாந் தணிந்த
மலைத்தட மார்பிடை மைமதர்க் கண்ணார்
முலைத்தடம் பாய முரிந்து முடவண்
டிலைத்தடத் தேங்கு மிரக்கமு முளதே 50.

சிலை தடம் தோளினர் - வில்லை யேந்திய தோளையுடைய மைந்தரின், செம் சாந்து அணிந்த - செந்நிறமான கலவைச்சந்தனம் பூசிய, மலை தடம் மார்பிடை - மலைபோன்று பருத்த விசாலமான மார்பினிடத்து, மை மதர் கண்ணார் - மை தீட்டிய மதர்த்த கண்களையுடைய மங்கையருடைய, முலைத்தடம் பாய - முலைகள் பாய்ந்தழுந்த, முடம் வண்டு - வளைந்த கால்களையுடைய வண்டு, முரிந்து - நசுங்கி, இலை தடத்து - இலைகள் பரந்த தாமரைத் தடாகங்களிலே, ஏங்கும் இரக்கமும் உளது - வருந்தும் சத்தமும் அங்கே உண்டு.

---

288. வனைந்தன போலும் வளர்ந்த முலையார்
இனைந்துதங் காதல ரின்பக் கனிகள்
கனிந்து களித்தகம் காமங் கலந்துண
முனிந்து புருவ முரிவ பலவே. 51.

வனைந்தனபோலும் - (கைவல் கம்மியனால்) செய்யப்பட்ட பாவையைப்போன்ற, வளர்ந்த முலையார் - பருத்துவளர்ந்த முலையையுடைய மாதர், தம் காதலர் - தமது அன்பர், இனைந்து - முன்பு வருந்திப் பின்பு, அகம் களித்து கனிந்து - உள்ளம் மகிழ்ந்துருகி, இன்பம் கனிகள் - இன்பமாகிய கனிகளை, காமம் கலந்து உண - காமத்துடன் கலந்து உண்ணும்பொருட்டு, முனிந்து - சினந்துஊட, புருவம் முரிவ - நெறிக்கப்படும் புருவங்களும், பல - பல அங்கு உண்டு.

'ஊடுதல் காமத்திற் கின்பம்' ஆதலின், அவ்வின்பத்தைத் தமது காதலர் பெற்று உண்டு மகிழும் பொருட்டு மாதர் ஊடினார் என்க.

---

289. செவ்வாய்ப் பவளக் கடிகைத் திரளெனும்
அவ்வா யமிர்தம் உண்டார் பலராவர்
ஒவ்வா திளைப்ப ரொசிந்தன ரோடரி
மைவா ணெடுங்கண் மலக்கம் பெரிதே. 52.

செவ்வாய் - செந்நிறம் தன்னிடத்தே பொருந்தலைக் கொண்ட, பவளம் கடிகை திரள் எனும் - பவளத் துண்டங்களின் திரளென்று சொல்லத்தக்க, அம் வாய் அமிர்தம் உண்டார் - காதலியரின் அழகிய வாயின் அமிர்தத்தை உண்டு கலவிபுரிந்த மைந்தரும், ஒவ்வாது - சமமான ஆற்றலில்லாமையால், இளைப்பர் ஒசிந்தனர் - தளர்ந்து இளைத்த மங்கையரும், பலர் ஆவர் - அவ்வூரில் பலர் உளராவர். (அவ்வாறு தளர்ந்த மகளிரின்) ஓடு அரி - செவ்வரிகள் பரந்த, மை வாள் நெடும் கண் - மை தீட்டிய வாளையொத்த நீண்ட கண்களின், மலக்கம் - கலக்கமும், பெரிது - பெரிது.

செவ்வாய் - செம்மை (செந்நிறம்) வாய் (வாய்த்தல்); வாய், முதனிலைத் தொழிற்பெயர். கடிகை - துண்டு, துண்டம். அம்வாய் - அவ்வாய்.

290. வளர்வன போலு மருங்குல்க ளேவத்
தளர்வன போலவர் தாமக் குழன்மேல்
கிளர்வன போதிள வாசங் கிளைத்துண்
டுளர்வன போதரு மூதை யுளதே. 53.

நோவ மருங்குல்கள் வளர்வன போலும் - (இடைகள் தாங்கமாட்டாது) வருந்தும்படி மாதர் தனங்கள் பருத்து வளர்ந்துள்ளன; தளர்வனபோல் - அதைக் கண்டு இரங்கிவருந்தினாற் போல, அவர் தாமம் குழல் மேல்-அவர்களுடைய பூமாலை சூட்டிய கூந்தலின்மீது, கிளர்வன - விளங்குவனவாகிய, போது இளவாசம் - பூக்களின் புதுமணத்தை,கிளைத்து உண்டு-கிளறி உட்கொண்டு, உளர்வன போதரும் - சத்தித்துக்கொண்டு சஞ்சரிக்கும், ஊதை உளதே - குளிர்ந்த தென்றற் காற்றும் அங்கே உண்டு.

'வளர்வன' என்பதற்கு ஏற்ற எழுவாய் வருவித்து உரைக்கப்பட்டது.

291. பஞ்சா ரகலல்குற் பாவையர் பூண்முலைச்
செஞ்சாந் தணிந்து திகழ்ந்த மணிவண்டு
மஞ்சார் பொழிலுள் வளர்பெடை கண்டதற்
கஞ்சா வொளிக்கும் அயல தனுவே. 54.

பஞ்சு ஆர்-செம்பஞ்சுக் குழம்புதீற்றிய, அகல் அல்குல்- அகன்ற அல்குலையுடைய, பாவையர் பூண்முலை செம் சாந்து - பெண்களின் ஆபரணங்களை அணிந்த முலைமேற் பூசிய செஞ்சந்தனத்தை, அணிந்துதிகழ்ந்த-தன்மேற் பூசிக் கொண்டு விளங்கிய, மணிவண்டு-கருவண்டை, மஞ்சு ஆர் பொழிலுள்-மேகங்கள் பொருந்தியசோலையினகத்தே,வளர்பெடை கண்டு-தாங்கிய பெண்வண்டு பார்த்து, அதற்கு அஞ்சா - அதற்குப் பயந்து, ஒளிக்கும் - ஒளிந்துகொள்ளும், அயலது அது - அயற்பக்கங்களை உடையது அது.

292. பாசிலை மென்றழைப் பள்ளியுட் பாவையர்
தூசினி னுணின்று சொரிமணிக் கோவையும்
பூசின சாந்தும் பிணையலும் போர்த்திடை
மூசின வண்டின மொய்பொழி லெல்லாம். 55.

வண்டு இனம் - வண்டுக் கூட்டங்கள், மொய் பொழில் எல்லாம் - மொய்த்து நெருங்கிய சோலைகளிலெல்லாம், பசுமைஇலை மென்தழை பள்ளியுள் - பசுமையான இலைகளும் மென்மையான தழைகளும் பரப்பிய படுக்கையில், பாவையர்-பெண்களின், தூசினின் உள் நின்று சொரி மணி கோவையும் - ஆடையின் உள்ளிருந்து அறுபட்டு உதிர்ந்த மணிவடமாகிய மேகலாபரணமும், பூசின சாந்தும் - மார்பிற் பூசிய சாந்தும், பிணையலும் - பூமாலைகளும், இடை போர்த்து மூசின - தரையை மறைத்து மொய்த்துக் கிடந்தன. இடை - இடம், தரை.

293. காம விலேகையுங் கற்பக மாலையும்
சேம மணிநகைச் செப்பினு ளேந்துபு
தூமக் குழலவர் தூது திரிபவர்
தாமத் தெருவிடைத் தாம்பலர் கண்டாய். 56.

தாமம் தெரு இடை - வீடுகள் நிரைந்த வீதியில், தூமம் குழல் அவர் - நறும்புகை ஊட்டிய கூந்தலையுடைய மகளிர், காமம் இலேகையும் - காம லிகிதங்களையும், கற்பகம் மாலையும்-கற்பகமலர் மாலைகளையும், சேமம் மணி நகை செப்பின் உள் - காவலான மணிகளின் ஒளியைக்கொண்ட செப்பினுள்ளே வைத்து, ஏந்தி - கையிலேந்திக்கொண்டு, தூது திரிபவர் - தூதியராகத் திரிபவர், பலர் கண்டாய் - பலராவர்.

இலேகை - எழுதப்பட்டது; காமலேகை - a love-letter. தாமம் - வீடு.

294. தாமத் தொடையல் பரிந்து தமனிய
வாமக் கலங்கள் புலம்ப மகளிர்கள்
காமக் கடலைக் கலக்குங் கழலவர்
தீமைத் தொழிலவை தேர்ந்துள வன்றே. 57.

தாமம் தொடையல் பரிந்து - பூமாலைகள் குலைந்து விழும்படிக்கும், தமனியம் வாமம் கலங்கள் புலம்ப - தங்கத்தாற்செய்த ஒளி பொருந்திய ஆபரணங்கள் (அசைந்து) ஒலிக்கும்படிக்கும், மகளிர்கள் காமம் கடலை கலக்கும் - தமது நாயகிகளின் காமத்தை மிகவும் எழுப்பிக் கலவிபுரியும், கழலவர் - குமரர்களின், தீமைத்தொழில் அவை - சுரதலீலைத் தொழில்கள், தேர்ந்துள அன்றே - இவ்வளவின என்று தேர்ந்து உணரத்தக்கன அல்ல.

தாமமாகிய தொடையல். பரிந்து - பரிய. காமக் கடலைக் கலக்கலாவது, புல்லுதல், சுவைத்தல், தாடனம் முதலிய புணர்ச்சித்தொழில் வகைகளில் 'மத்தனம்' (கடைதல்) எனப்படுவது.

கரிகர மாதி யாய கனங்குழை மகளிர் வெலீக
மருவிய வழிபா டன்றே மத்தன மென்ப வல்லோர்.
(கந்த புராணம், இந்திரபுரிப்.)

'தீமைத்தொழில்' என்றார் அவற்றின் இழிபுபற்றியும், அப்பொழுது மிக்க இன்பத்தைத் தந்து காம நுகர்ச்சியிலேயே மனதை அழுத்தி அவை பின்பு பல துன்பங்களை விளைவித்தலை நோக்கியும்.

(வேறு)

295. பொன்னகர் தன்னை யாள்வான்
புரந்தர னனைய மாண்பின்
மன்னவன் மயூர கண்டன்;
மற்றவன் றேவி மாருள்
மின்னவிர் மருங்கு னீலாங்
கனையென விளங்கி நின்றாள்
அன்னவள் புதல்வன் கண்டாய்
அச்சுவக் கிரீவ னென்பான் 58.

பொன்னகர் தன்னை - இரத்தினபல்லவமென்னும் இந்த அழகிய நகரத்தை, ஆள்வான் - தலைநகராகக் கொண்டு இருந்து அரசுபுரிந்த, புரந்தரன் அனைய மாண்பின் - இந்திரனுக்குச் சமானமான சிறப்புவாய்ந்த, மன்னவன் - மன்னனாவான்,மயூரகண்டன் -மயூரகண்டன் என்னும் பெயரையுடையவன்; அவன்தேவிமாருள் -அவனுடைய மனைவியர்தம்முள், மின் அவிர் மருங்குல்-மின்னலையொத்த இடையையுடைய,நீலாங்கனை என - நீலாங்கனை என்ற ஒருத்தி, விளங்கி நின்றாள் - மேம்பட்டு விளங்கி நின்றாள்; அன்னவள் புதல்வன்-அவள் வயிற்றிற் பிறந்த புதல்வன், அச்சுவக்கிரீவன்-அசுவக்கிரீவனென்னும் பெயரையுடையவன். கண்டாய் - முன்னிலை அசைச்சொல்.

296. அதிர்கழ லலங்கல் வேலோய்
அச்சுவக் கிரீவ னென்னும்
பொதியவிழ் பொலங்கொள் பைந்தார்ப்
புரவலன் றிகிரி யெய்தி

மதிதவழ் குன்ற மெல்லாம்
வணக்கிய பின்றை மண்ணும்
கொதிதவழ் வேலி னான்றன்
குறிப்பொடு கூடிற் றன்றே 59.

அதிர் கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த, அலங்கல் வேலோய் - ஒளி பொருந்திய வேலையேந்திய வேந்தே, அச்சுவக்கிரீவன் என்னும் - அந்த அசுவக்கிரீவன் என்னும், பொதிஅவிழ் பொலம் கொள் பசுமைதார் புரவலன் - கட்டவிழ்ந்த பொலிவைக் கொண்ட பசுமையான பூமாலையை அணிந்த மன்னன், திகிரி எய்தி - அரச பதவியை அடைந்து, மதிதவழ் குன்றம் எல்லாம் - சந்திரன் தவழ்ந்து செல்லும் மலைப்பிரதேசங்களாகிய வித்தியாதர நாடுகளையெல்லாம், வணக்கிய பின்றை - தனது ஆளுகையின் கீழாக்கிய பின்பு, மண்ணும் - மண்ணுலகமும், கொதிதவழ் வேலினான் தன் - நெருப்பின் வெப்பம் பொருந்திய வேலையேந்திய அவனுடைய, குறிப்பொடு கூடிற்று - ஆணைக்கு உள்ளடங்கி அவன் ஏவலின்படி ஒழுகலாயிற்று.

பொலம் - அழகு, பொலிவு. கொதி - முதனிலைத் தொழிற்பெயர், சினம் என்றுமாம்.

297. சுற்றமாண் புடைமை யாலும்
சூழ்கதிர்த் திகிரி யாளுங்
கொற்றமாங் குடைமை யாலும்
குலத்தது பெருமை யாலும்
கற்றமாண் விஞ்சை யாலும்
கருதிய முடித்த லாலும்
வெற்றிவே லவனோ டொப்பார்
வேந்தர்மற் றில்லை வேந்தே. 60.

வேந்தே-அரச, சுற்றம் மாண்பு உடைமையாலும்-உறவினரின் திறலாகிய பெருமையைப் பெற்றிருத்தலாலும், சூழ்கதிர் திகிரி ஆளும் கொற்றம் உடைமையாலும்-ஒளிபொருந்திய ஆஞ்ஞாசக்கரத்தைக் கையாளும் வலிமையை உடைமையாலும், குலத்துபெருமையாலும்-தனதுகுலத்தின் மேன்மையாலும்,கற்ற மாண் விஞ்சையாலும் - தான் கற்றுள்ள சிறந்த வித்தைகளாலும், கருதிய முடித்தலாலும் - நினைத்தகாரியத்தை நினைத்தவண்ணம் செய்து முடிக்கவல்ல ஆற்றலுடைமையாலும், வெற்றி வேல் அவனோடு - வெற்றி வேலையுடைய அவனொடு, ஒப்பார் வேந்தர்மற்று இல்லை - ஒப்பவராகிய மன்னர் வேறு ஒருவரும் இல்லை.

298. தம்பியர் நீலத் தேரோன்
தயங்குதார் நீல கண்டன்;
வம்புயர் மகரப் பேழ்வாய்
வயிரமா கண்டன்; வண்டுந்
தும்பியந் துவைக்குந் தொங்கற்
சுகண்டனென் றிவர்கள் கண்டாய்
வெம்பிய வுருமுத் தீயுங்
கூற்றமும் வெதுப்பு நீரார். 61.

தம்பியார் - அவனுடைய தம்பிமார், நீலத்தோரோன் - நீலரதனும், தயங்குதார் நீலகண்டன் - விளங்கு மாலையை அணிந்த நீலகண்டனும், வம்புஉயர் - புதுமை வாய்ந்த, மகரப்பேழ்வாய் - மகர கண்டிகையை அணிந்த, வயிரமா கண்டன் - வஜ்ரகண்டனும், வண்டும் தும்பியும் - வண்டினம் பலவும், துவைக்கும் தொங்கல் - (தேனையுண்டுகளித்து) ஒலிக்கும் மாலையை யணிந்த, சுகண்டன் - சுகண்டனும், என்ற இவர்கள் - என்னும் பெயரையுடைய நால்வரும் வெம்பிய உருமுதியும் - சுடுகின்ற இடியின் நெருப்பையும், கூற்றமும் - யமனையும், வெதுப்பும் நீரார் - சுடுவிக்கும் தன்மையராவர்.

ஊழ்வினையும் ஆள்வினையும்

[546-வது பக்கத் தொடர்ச்சி]

நுகர்தல் முகர்தல் அசைதல்முதலாக எல்லாம்வினையாதலால் வினையின்றி யிருக்க வியலாது. வினையிருக்கும் வரையில் துன்பமுண்டு, பிறவியுண்டு. முக்காலத்தால் மூன்று வகைப்பட்டிருக்கும் வினையினின்றும் எவ்வாறு மீள இயலும் என்று நன்கு துருவி கவனிப்போமானால், விளங்காது போகாது. பொதுவாகச் சிந்தித்தால் நாம் அனுபவிக்கவேண்டியதாய்க் களஞ்சியத்திலிருக்கும் வினைகள் முழுவதும் அனுபவித்த பிறகு சஞ்சிதம் இல்லையாகும். வினை செய்யாமல் இறைப்பொழுதும் இருக்க வியலா தென்பதை முன்னமே அறிந்திருக்கின்றோ மாதலால், அதினின்று மீள்வது எவ்வாறு என்று, முன்னர் அறிந்துகொள்ள வேண்டி யிருப்பினும், ஆகாமிய வினை செய்யாதிருந்தா லில்லையாகு மென்று, வைத்துக்கொள்வோம். ப்ராரப்தம் நுகர்ந்து தீர்ந்துவிடலாம். சஞ்சித வினையை எத்தனை யாயிரம் பிறவிக ளெடுத்து அனுபவித்துத் தீர்ப்பது? இது முடிவதொன்றா? அப்படியே வைத்துக்கொண்டாலும் அத்தனை யாயிரம் பிறவிகளிலேயும் ஆகாமியம் ஆற்றாமல் இருக்கவேண்டுமே. இயலுமா? ஆகாமியம் சேர்ந்துவிட்டால் சஞ்சிதத்தில் வந்து ப்ராரப்தமாகப் பலிக்குமே. இவ்வாறு நீர்த்துக்கொண்டு வருதற்கு இதுவே கவனமாக அறிவாளி ஆற்றினும் பல்லாயிரங்கோடிப் பிறவிகள் ஆகுமே' என்று சங்கிக்க வேண்டியது சாதம். இதற்காகவே தக்கார் நம்மீது தயைபுரிந்து எளியதொரு முறை தெரிவித்திருக்கின்றார்கள். சங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமிகள் 'வேதாந்த டிண்டிமம்' என்னும் நூலில் "ஸஞ்சிதாகாமி கர்மாணி தஹ்பந்தேஜ் ஞான வஹ்நிநா" சஞ்சிதமும், ஆகாமியமும் ஞானமாகின்ற நெருப்பினாலே எரிக்கப்படுகின்றன. 'ப்ராரப்த அனுபவான் மோக்ஷ''ப்ராரப்தத்தை அனுபவித்தானதும்மோக்ஷம்' என்கின்றார். 'ஞானம்' என்ற, ஒன்று உண்டான வளவிலே முன் பின் வினைகள் எரிந்துவிடுகின்றன. இவ்வாறே கைவல்லியமும் ஞானமிர்தமும் கூறுகின்றன. ஆதலால் இவ்விருவினைகளும் ஞானத்தால் ஒழிந்தாலும் நாமிருக்கும்வரை அனுபவித் தாகவேண்டிய —இப்பிறவிக்கென்று எடுத்துக்கொண்டு வந்த ப்ராரப்தம் புசித்தே ஆகவேண்டும். இதனாலன்றோ மகாமேதாவிகளுங்கூட வறுமையாலும் ஏனைய தீமைகளாலும் 'ஞானம்' கைவரப்பெற்றும் அனுபவித்தார்கள்,

அனுபவிக்கிறார்கள். இதைக் கருத்துட்கொண்டே ஆந்திர ரொருவர் 'எவ்வளவு ரசவாதங்கள் கற்றிருந்த போதிலும், எத்தனை அரசர்களை வென்றிருந்தாலும், உதவி வேறொருவரின்றி ஒன்னலரைப் பொருதொழிப்போ னாயினும், கடலைக் கலக்கும் திறனுடையோனாயினும், மந்திரஞ் சற்றவனாயினும், கல்வி கற்றவனாயினும் (நொஸடன் வ்ராவலின வ்ரால கன்ன கலதே னூறேண்டனூ சிந்திஞ்சினன்)-நூறுவருடங்கள் நினைத்தாலும் தலையில் எழுதின எழுத்தைக் (ஊழைக்) காட்டினும் வேறுண்டோ' என்கிறார். இதைக் கொண்டன்றோ இராமபிரான்மாட்டு இராமாவதாரம்

எய்தவின்னல் வந்தபோழ்தி யாவரேனும் யாவையும்
செய்யவல்ல ரென்பதோர்க செந்நெறிக்க ணேருடை
மைய்யகண்ணி செய்யபாதம் வல்லவாய மற்றிவன்
கைகளின்று பன்னசாலை கட்டவல்ல வாயவே.

என்று கூறுகின்றது. ஊழ் உறுத்தவந்த காலத்து அதினின்றும் தப்பித்துக்கொள்ள எவராலும் இயலாது. "தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பர்'. ஊழ் பலிக்கத் தலைப்பட்டகாலத்தே அப்பலத்தை நுகராது விலக்கிவிட எவராலும் இயலாது என்பதை ஒவ்வொரு பாத்திரத்திலேயும் ஊழின் மலிதத்தைவைத்து நடத்துகின்ற சிலப்பதிகாரம் ஒன்றே சாலும். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று—சூழினுந் தான்முந் துறும்."—ஆதலால் ஊழைக்காட்டினும் வன்மையுடையது வேறொன்று மில்லை. செய்ந்நன்றி மறவாச் சேவகன் 'ஊழ்' என்று கூறலாம். எவ்வெவர் எதெது செய்தார்களோ அவ்வவர்க்கு அதனதன் பயனைத்தருவதால் எவ்வெவ்வுறுப்பால் நல்லன தீயன செய்தோமோ அவ்வவ் வுறுப்பால் அதனதன் பயனை அனுபவிக்கச்செய்வதில் மறக்காமலும் மாறாமலும் இருத்தலால் அதன் திறத்தை வியக்கவேண்டியிருக்கின்றது. நாம் எத்தனைக் கடவுளரை இம்மையில் இப்பிறப்பில் வேண்டிக் கொள்ளினும் அன்னார் மும்மூர்த்திகளாயினும், தகாதன செய்து தண்டனைக் குரியோன் தனந்தந்தோ (லஞ்சம்) அவர் தமக்கு வேண்டியவர்தம் சிபார்சுகடிதங் கொண்டோ அத்தண்டனையினின்றும் தப்பித்துக்கொள்வது போன்று, இவ்வூழினின்றும் தப்பித்துக் கொள்ளவோவியலாது. தீயவை செய்தோர் எவ்வகையினும் நல்லவை நுகரலென்பது இயலாதாம்.

அல்லித்தா ளற்ற போது
மறுதநூ லதனைப் போலத்
தொல்லைத்தம் முடம்பு நீங்கத்
தீவினைத் தொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து
புக்குழி புக்குப் பின்னின்
றெல்லையில் துன்ப வெந்தீச்
சுட்டெரித் திடுங்க ளென்றே

என்று சிந்தாமணி கூறுகின்றது. நல்லவை செய்தோர் மாட்டுத் தீயவை மறந்தும் அணுகா.

அறவிய மனத்த ராகி
ஆருயிர்க் கருளைச் செய்யின்
பறவையு நிழலும் போலப்
பழவினை யுயிரோ டாடி
மறவியொன் றானு மின்றி
மனத்ததே சுரக்கும் பால
கறவையிற் கறக்குந் தம்பால்
காமுறப் பட்ட வெல்லாம் (சிந்தாமணி)

என்பதை நாம் நன்கு அறிகின்றோம்.

நாம் ஓர் இன்பமோ துன்பமோ நுகர நேருமாயின் ஒருவரால் அன்றி ஒன்றினால் வரப்பெறுவோம். அவ்வாறு பெற்றமேலோர் அது பலித்தற்குக் காரணரான அவரையோ அதனையோ நோவதுமில்லை மகிழ்வதுமில்லை. ஒருவன் தீங்கு செய்வானாயினல் நாம் செய்த முன் தீவினைப்பயனைப் புசித்து அறுதற்கு உதவியாய் இருந்தனனேஎன்று மகிழ்வர். நன்மைசெய்வானாயினல் நல்வினைப்பயன்தர உற்ற உதவியாய் வந்தனனேஎன்று அன்பு பாராட்டுவர். 'தாமே தமக்குப் பகைவனும் நட்டானு' மாதலால், 'தீது நன்றும் பிறர்தர வாரா, நோதலுந் தணிதலும் அவற்றோரன்ன' என்று அமைதி அடைவர். நமக்கு நல்லூழ் நடைபெறுமானால் எத்தனை ஆற்றலுடையோன் தீமை செய்யினும் அது ஒன்றுஞ் செய்யாது. நல்லூழின்பலனையே நுகர்வோம். கொடுங்கோன் மன்னனாந் துரியோதனன் வீமனைக் கொல்வதற்கு விடங்கலந்த அன்னத்தை உண்ணச் செய்து பாதாளத்தில் தள்ள அவ்விடத்தில்தேவரும் அரிதிற் பெற்ற அமுதத்தையுண்டு நாக கன்னிகையையும் மணந்து வெளிவந்து நனி விளங்கினன். குந்திதேவி கன்னிகையாயிருந்தபோது பெற்ற கன்னனைப் பேழையில் வைத்துக் கங்கையில் விட்டிட அவன்றன் நல்லூழால் துரியோதனனுக்குத் தோழனாய் அங்கதேச மன்னனாய்த் தன்னையும் துறந்து தருமஞ்செய்து தாங்கஞ் சூழ்ந்த தரணியெங்கும் இவனினுங் கொடையோன் எவனுமில்லென இயம்புமாறு தனிப்பெரு வள்ளலானன். இதனை ஞானமிர்தமும்,

நஞ்சினி தருந்தினு நல்வினை மாட்சி
வஞ்ச மில்லோர்க் கமிழ்தா கற்றே
நஞ்சம லயினி நாக முயர்த்தோன்
வெஞ்சின வீமன் விட்டிட வருத்தி
நாக நூக்க நாகரும் பெறுஅ
வாரமிழ் தன்றி யணங்கொடு நடந்த
பேரிசை யானே பாரத மிசைக்கும்
அன்றே னௌவை யருமுனி பணியிற்
கன்னனைப் பயந்து நன்னதி யியக்க
வங்கர் கோனு யரசுதலை பணித்துப்
பொங்குதிரை யாடைப் பாவுபூண் டிசினே.

என்று கூறுகின்றது. பின்னும்,

அறப்பயன் றீரி னமிழ்தே யானுங்
கடுப்பா டெய்தல் விடுத்தே வின்றே
தக்க னெடுத்த முத்தீ முற்றத்து
ஒக்க வானே ருற்றதை பெரிதே
யெயிறுந் துண்டமும் முகனுங் கையு
மந்தியும் வாணியு மிந்துவு மெரியு
மிழப்பத் தக்க னிருஞ்சிர மிழந்து
தகர்ச்சிர மெடுத்துப் பிழைத்ததை யுரிதே,
வாஸவன் கோகில மாகினன் கடிதே,
இந்திர சித்தோ டியாளி வாருசி
தந்திரம் பயின்று தலைமையின் வழார்
வினைப்பய னுணர்ந்து வெல்வகை நாடித்
தவத்திறம் படருங் காலை முகைத்தாழ்
கொம்மை வெம்முலை யிணையோட் கூடும்
தம்மை யன்றி யருந்தினன் றணிய *
லயில்புரை செடுங்க ணம்பணைத் திரடோள்

மயிலியற் சாயற் குயிலியற் கிளவிக்
கலங்கழி மகளி ரையிரு நூற்றுவர் *
மணந்தோன் மன்ன னுணங்க யாளி
கூவற் றாண்டு மாதப் புலைச்சி
காதற் காசனி யாகி மேதினி
யின்னிசை யெழுவர் பயந்தோ னீண்டே
சிந்து நாடன் செயத்திர தன்முடி
யிலங்கிலை வாளியி னிறுத்தோ னிற்ப
நிலம்புக வெறிந்த தவம்புரி தந்தை
தன்றலை தரைசே ரந்தனம் பெரிதே
பாண்டவர் மரபி னுண்டகைக் குரிசில்
சமையன் வேள்விக் குருமுனி யுற்ற
தன்மையு நன்மை யன்றே, விண்ணோர்
மகுடம் புனைந்த நகுடன் பாந்தட்
படிவங் கொண்டு படிசேர்ந் தனனே,
திருமணி வள்ளத் துயிர்மருந் துதவி
யடப்படு தெண்ணீ ராறு
முடற்பகை யற்று னுணருங் காலே.

நல்லூழ் தீர்ந்தவாறே அமுதம் உண்ணினும் விடத்தால் உண்டாகும் தீங்கை விளைத்துவிடும். தக்கன் உலகம் போற்றும் யாகஞ்செய்ய உதவியாயிருந்த தேவர்கள் பட்டபாடு அறிவோம். ஆதித்தருள் ஒருவன் பல்லிழந்தான். வாணி மூக்கிழந்தாள். சந்திரன் முகம் பெயர்ந்தான். தக்கன் தன் தலையிழந்து தம்பிரானருளால் தகர்த்தலை யடைந்தான். இந்திரன் குயிலாய்ப் பறந்தான்.

இந்திரசித்து, யாளிதத்தன், வாருசி என்னும் மகரிஷிகள் மூவரும் முன்வினை தமக்கு எய்துங் காலமறிந்து அதனை வெல்லுவான்வேண்டி வேடங்கொண்டு நாடுகடந்து சஞ்சரிக்குங்காலத்தில், வாருசி யென்பான் தன் தங்கையைத் தழுவப் பெற்றான். மதுவை யுண்டான். * இந்திரசித்து இறந்த அரசனின் உடலிற் புகுந்து மங்கலநா ணிழந்த அவ்வரசனது மனைவியர் ஆயிரவரையும் அணைந்தான். யாளிதத்தன் தன்னாலே வெட்டுண்டு கிணற்றிலே தள்ளப்பட்ட சண்டாளப் பெண்ணை ஓர் பிராமணன் எடுத்துக்கொண்டுபோய் உத்தரபூமியில் வளர்த்துப் பின்பு இவனுக்கே கொடுக்க உலகெங்கும் உத்தமி யென்று போற்றப் பேற்ற கபிலர் உள்ளிட்ட ஏழு பிள்ளைகளையும் பெற்றன ளன்றோ?

மகனும் செயத்திரதன் தலை அறுப்பார்தம் தலை அறுபடத் தவம்பண்ணும் விருத்தக்ஷத்திரன் தன்தலை இழந்தானன்றோ?

ஜனமேஜயன் செய்த யாகத்தில் ஆசாரியன் பக்கல் செய்த சிறு சேஷ்டையால் பெரியதொரு குருத்ரோகம் அடைந்ததை அறிவோம்.

தேவர்கள் வணங்க இந்திரனாக வேண்டிய நகுடன் முனிவரை யிகழ்ந்து பாம்பாய் முடிந்தான். இன்ன பிற நோக்குங்கால் இரத்தினப் பொற்கிண்ணத்தில் சாவா மருந்தா மமுதம் உண்ணினும் நல்லூழ் நகர்ந்தவாறே நனவொடு உடலை இழப்பிக்கும் விடமாய் முடியும்.

* இக்குறியிட்ட இருவர்தம்முடைய செய்கை ஊழில் சேர்க்கமுடியாது. அவர்கள்தம் நேரிய சரிதம்கிடைத்தில. ஊழுக்கு அவை முரணாயிருந்தால் இவ்வாசிரியர் பாவில் ஆண்டிருக்க மாட்டாராதலால் கிடைக்கும் வரை அதை நிறுத்திவைத்தல் நலம். அக்கருத்தைக் கொள்ளலாகாது.

யாப்பிலக்கணம்

188927.

செய்யுள்—வெண்பா—ஓசை

[550-வது பக்கத் தொடர்ச்சி]

இயற்சீர்களேனும் காய்ச்சீர்களேனும்பெற்று வெண்டளை பிறழாமல் அளவடிகள், இரண்டு மூன்று நான்கு அல்லது பல அடிகள் உடையதாய், ஈற்றடி சிந்தடியாகி, நாள் மலர் காசு பிறப்பு என்னும் இவ் வாய்பாடுகளில் ஒன்றினால் முடிகின்ற பா, செப்பலோசை சிறந்திசைக்கும் வெண்பா வாகும்.

இச் செப்பலோசையில், முற்றும் வெண்சீர் வெண்டளையால் அமைந்த வெண்பா, ஏந்திசைச் செப்பலோசையும்; முற்றும் இயற்சீர் வெண்டளையால் அமைந்த வெண்பா தூங்கிசைச் செப்பலோசையும்; இரண்டு வெண்டளைகளும் விரவியமைந்த வெண்பா ஒழுகிசைச் செப்பலோசையும் உடையதாயிருக்கும்.

ஏந்திசைச் செப்பலோசையானது, ஒருவிடயத்தை எடுத்துத் தொடர்ச்சியாய், "இதனை நீ உய்த்துணர்ந்து நினைவிற்கொள்" என்ற தன்மையுடன் இசைக்கும் ஓசையாம். இந்த வோசைக்கிடனாய வெண்பாவில் பெரும்பாலும், சொற்கள் ஒன்றினை ஒன்று தொடர்ந்து ஒரு கருத்தைச் செலுத்திக்கொண்டு போவதாயிருக்கும்:—

புன்னினுமே நீர்போல நில்லாமை யென்றெண்ணி
யின்னினியே செய்திடுக நல்வினைக-ளின்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்
சென்றான் எனப்படுத லால்.

(நாலடியார் செய்யுளொன்று சிறிது மாற்றப்பட்டிருக்கின்றது)

இதனில் எல்லாம் வெண்சீர் வெண்டளைகள். இச் செய்யுளை நாவால் உரைத்துப் பார்க்குங்கால், கேட்பவர் கேளுங்கள் என்பதுபோல் ஒலித்துவிடயத்தைத் தொடர்ச்சியாய்க் 'கேட்டு உணர்மின்' என்ன எடுத்துச்சொல்லும் இசை வாய்ந்திருப்பது புலப்படும். இப்படியே,

மற்றெடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த நன்மக்காள் பேர்ந்தேகுங்-கொற்றவனை
நீரேனுங் காண்குதிரோ வென்றழுதா ணீள்குழற்குக்
காரேனு மொவ்வாதாள் கைத்து.

[நளவெண்பாச் செய்யுளொன்று சிறிது மாற்றப்பட்டிருக்கின்றது]

என்னுமிச் செய்யுளிலும் வெண்சீர் வெண்டளைகளால் ஏந்திசைச் செப்பலோசை அமைந்திருப்பது காண்க

தூங்கிசைச் செப்பலோசையோ தாழ்ந்து இசைக்கும்: வெண்பாவிற்குரிய, 'கேட்பவர் கேளுங்கள்' என்னும் பாவனை ஒலிப்பதுடன் அதனைத் தாழ்ந்து செப்புவது போலவும் தோன்றும்; மேலும் ஏந்திசையைப் போல் தொடர்ந்து ஒலிப்பதின்றி இடையிடையே சிறிது தூங்கித்தூங்கி நின்றுவிடுவது போலவும் இருக்கும். விடயம் ஒன்றேயாயினும் வேறுபட சில கருத்துக்கள் சேரவருங்கால் இரண்டிற்கும் சிறிது இடையிலே தூங்கல் இயற்கை. இத்தூங்கல் ஓரடிக்கும் மற்றோரடிக்கும் இடையேனும், அல்லது சீர்களுக்கு இடையேனும் நேரலாம். முற்றும் இயற்சீர் வெண்டளைகளால் வரும் வெண்பா, இவ்வண்ணம் தூங்கிசைச் செப்பலோசை யுடையதாயிருக்கும் :—

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். (குறள்)

இதனில் எல்லாம் இயற்சீர் வெண்டளை. இதை நாவினுல் உரைத்துப் பார்க்குங்கால், பிறர்க்கு ஒன்றைத் தெரிவிக்கும்படி இசைக்கின்ற செப்பலோசையும், அவ்வோசை உயர்ந்தொலிக்காமல் தாழ்ந்து ஒலிப்பதும், அவ்வாறு ஒலிக்குங்கால் இடையே சிறிதுவிட்டு இசைப்பதும் புலப்படும். உறுதி - கிளைஞரை, என்னுமிடத்துத் தூங்குந் தன்மை நன்றாகத் தென்படுகின்றது. இப்படியே,

ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். (குறள்)

என்பது தாழ்ந்திசைப்பதோடு, ஏழை-தமியனாய் என்பவைகளுக் கிடையே ஓசை தூங்கிப்போய்ச் சிறிது நின்றுவிடுவதுங் காண்க.

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள். (குறள்)

என்னும் வெண்பாவில், முதலடிக்கும் இரண்டாமடிக்கும் இடையே ஓசை சிறிது தூங்குவது காண்க. இனி,

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன் (குறள்)

என்னுமிவ் வெண்பாவில் தாழ்ந்திசைக்கும் செப்பலோசையுடன் அவ்வோசை பெரும்பாலும் ஒவ்வொரு சீரிற்கிடையும் தூங்கித்தூங்கி நின்றுவிடுவதையுங் காணலாம். இவ்வாறே,

ஆடு மகளிரின் மஞ்ஞை யணிகொளக்
காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன
பாடுவண் டூதும் பருவ மணியிழை
வாடும் பசலை மருந்து

(கார்நாற்பது — பணைத்தோளி என்றிருந்தது "அணியிழை" என மாற்றப்பட்டிருக்கின்றது)

என்னும் இவ் வெண்பாவிலும், செப்பலோசையானது, ஓங்குதலின்றித் தாழ்வுடையதாய், இடையிடையே ஒலித்தொடர்ச்சி செல்வதின்றித் தூங்கிவிடுவதுபோல், இசைப்பதைச் செவியால் சோதித்து உணர்ந்துகொள்ளலாம்.

வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய
வோரரும்பச் செங்கயற்கண் மீமதர்ப்ப—மூரனனி
யூருந் தெரிவை யொளிமுகச் செவ்வியால்
கூர்வேன் குறையா மகிழ்வு.

என்னுமிவ் வெண்பாவில், முதலிரண்டடிகள் வெண்சீர் வெண்டளைகளால் அமைந்திருப்பதற்கேற்ப ஏந்திசைச் செப்பலோசையும் பின்னிரண்டடிகள் இயற்சீர் வெண்டளைகளால் அமைந்திருப்பதற்கேற்பத் தூங்கிசைச் செப்பலோசையும் பெற்றிருக்கின்றன.

இருவித வெண்டளைகளும் விரவிவரும் வெண்பா, ஒழுகிசைச் செப்பலோசைக்கு இடமாகும். ஏந்திசையைப்போல் உயர்ந்தும் தூங்கிசையைப்போல் தாழ்ந்தும் இசைத்தலின்றி இரண்டிற்கும் மத்திமமாக இசைப்பது ஒழுகிசைச் செப்பலோசை. வெண்பா நூல்களில் வரும் செய்யுள்கள் பெரும்பாலும் இவ்வாறு தான் இருக்கும்.

பகச்சொல்லிக் கேளிர் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்.

உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்

என்னுமிக் குறள்வெண்பாக்களில் இருவகை வெண்டளையும் விரவிச் சமமாய் ஒழுகிய செப்பலோசை ஒலிப்பது காண்க.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

இம் மூதுரை வெண்பாவில்இருவகை வெண்டளைகளும் விரவிவருவதால் ஒழுகிசைச் செப்பலோசை பிறக்கின்றது.

காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்

என்னுமிக் குறள்வெண்பா தூங்கிசைச்செப்பலோசையுடையது. இக்கருத்தையே, தழுவி

காதலர்தா மில்லாயின் புன்மாலை கொல்களத்து
ளேதிலர்போல் வந்திடுமா லின்று

என மாற்றி முற்றும் வெண்சீர் வெண்டளைகள் வருமாறு அமைத்தால் ஓசையும் ஏந்திசைச் செப்பலோசையாக மாறிவிடுவது காண்க. மறுபடி இதனையே,

காதல ரில்வழி யிம்மாலை கொலைகளத்
தேதிலர்போற் கொல்வான் வரும்

என இருவகை வெண்டளைகளும் விரவி வரும்படி அமைத்தால் ஒழுகிசைச் செப்பலோசை உண்டாவதுங் காணலாம்.

இவ் வொலிவேற்றுமைகளை, எழுதிக்காட்டுவது எளியதன்று. நல்ல வெண்பாக்களைப் பாடிப் பழகப் பழகவே மெல்லமெல்ல அவைகளின் நுண்மை புலப்படும். மேலும் தூங்கிசைச் செப்பலோசை பிறப்பதற்குச் சீரினின்று சீர் விட்டிசைக்கவேண்டுமென்பதும், ஏந்திசைச் செப்பலோசை பிறப்பதற்குத் தொடர்ந்திசைக்க வேண்டுமென்பதும் இன்றியமையா இலக்கணமாகும் என்று எண்ணலாகாது. பெரும்பாலும் அவ்வாறு அமைவது இயற்கையாவதால் மிகுதிபற்றி அது கூறினோம். மேலும், ஏந்திசைச் செப்பலோசையும், தூங்கிசைச் செப்பலோசையும் பிறப்பதற்கு வெண்பா முற்றும் முறையே வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் [illegible] வேண்டு மென்ற கட்டாயமுமில்லை என்னலாம். முற்ற

வெண்டளை ஒன்றிரண்டு கலந்துவரினும் அவ்வவ்வோசையின் அமைதி மாறாம லிருக்கலாம்.

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

மேல்காட்டிய பாட்டின் முதலிரண்டடிகளில், காப்ப-ரறிவுடையோர், என ஒரு இயற்சீர் வெண்டளை வரினும் மற்றவை வெண்சீர்வெண்டளைக ளாதலால் அவ்விரண்டடிகள், ஏந்திசைச் செப்பலோசை கெடாமல் இசைக்கின்றன. அவ்வாறே, பின்னிரண்டடிகளில், குளிர்நிழலைத்-தந்து, என ஒருவெண்சீர் வெண்டளை வரினும், மற்ற வெல்லாம் இயற்சீர் வெண்டளைகளாதலால், அவ்வடிகள் தூங்கிசைச் செப்பலோசை கெடாமல் இசைக்கின்றன.

இப்படியே செய்யுள் முழுதும் நோக்குமிடத்தும் வெண்டளை வகைகளின் மிகுதிபற்றி ஏந்திசைச்செப்பலும் தூங்கிசைச்செப்பலும் சிறந்து ஒலிப்பது காணலாம்:—

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—யக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையு
மானகத்தேர் பாகன் வடிவு

என்னுமிவ் வெண்பாவில் இயற்சீர் வெண்டளைகள் நான்கேயாக மற்றவை வெண்சீர் வெண்டளைகளாகி, ஏந்திசைச் செப்பலோசை சிறந்திசைக்கின்றது. இதுவும்,

எக்குலத்தா யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்த—மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து.

என்னும், முற்றிலும் வெண்சீர் வெண்டளைகளாலேயே அமைந்த வெண்பாவும் ஒரே தன்மையாய் இசைப்பது காண்க. இப்படியே,

சந்தக் கழற்று மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—யெந்தாய்
வடந்தோய் களிற்றாய் வழியான வெல்லாங்
கடந்தோமோ வென்றார் கலுழ்ந்து

என்னுமிவ் வெண்பாவில், வெண்சீர் வெண்டளைகள் ஐந்தொழிய மற்றவை இயற்சீர் வெண்டளைகளாகித் தூங்கிசைச் செப்பலோசையே சிறப்பது காண்க. இதுவும்,

அழுவார் விழுவா ரயிர்ப்பா ருயிர்ப்பார்
தொழுவார் தமரொடுஞ் சூழ்வார்—வழுவிலாக்
காமநீ ரோதக் கடல்கிளர்ந் தொத்ததே
நாமவேல் வீம னகர்.

என்னும், முற்றும் இயற்சீர் வெண்டளைகளால் அமைந்த வெண்பாவும் ஒருபடித்தாய்த் தூங்கிசைச் செப்பலோசைபெற்று ஒலிப்பது காண்க. மற்று,

செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை—யிப்பொழுது
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து.

என்னும் வெண்பாவில் இருவகை வெண்டளைகளும் சமமாய் விரவிவர ஒழுகிசைச் செப்பலோசை பிறக்கலாகின்றது.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 4. நகர்நீங்கு படலம்.

[555-வது பக்கத் தொடர்ச்சி.]

மன்னவன் மைந்தனாய் மாற்றம் பேசவோ.

அண்ணனே டேகென் றன்னையுந் தனக் காணைதந்
தருளியபின் தடையினி யாதுமிலதெனு முறுதி
யால் இலக்குவனும் வற்கலை யணியலுற்றான். அப்போது,

தான்புனை சீரையைத் தம்பி சாத்திடத்
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினான்
வான்புனை யிசையினாய் மறுக்கி லாதுநீ
யான்புகல் வதனையதோ ருறுதி கேளென

[தான் அணிவதுபோன்ற மரவுரியை இலக்குமணனும் அணிந்துகொள்ள அச்செய்கையை, தேன் பொருந்திய மாலையணிந்த இராமன் நோக்கி, "வானுலகத்தையும் அழகுசெய்யவல்ல கீர்த்தியுடையவனே, நான் சொல்லும் இந்த நல்ல வார்த்தையை மறுக்காமல் கேள்" என்று]

அன்னைய ரனைவரு மாழி வேந்தனு
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினர்
என்னையும் பிரிந்தன ரிடரு றுவகை
உன்னைநீ யென்பொருட் டுதவுவா யென்றான்

[நம் தாயர் அனைவரும், சக்கிரவர்த்தியும், முன்போன்ற நிலையில் இல்லாமல் கொடிய துன்பத்தில் அழுந்தியிருக்கின்றார். என்னையும் பிரிந்தனர், உன்னையும் பிரிந்து அவர் பின்னும் பேரிடர் அடையாதபடி உன்னை நீ என்பொருட்டு அவர்களுக்கு உதவக்கடவாய்"— என்றான்.]

முன்னையரல்லர், என்பது கோசிகமுனிவனுடன் இவரிருவரும் அகன்றபோது இருந்ததுபோன்றதோர் நிலையன்றிப்போதிருப்பது, என்னுங் கருத்தது. "உன்னை நீ என்பொருட் டுதவுவாய்" என்ன எளிய சொற்களால் பொருட்செறிவும் பொருத்தமும் சிறக்கும்படி தமிழ்மொழியில் அமைக்கவல்லவர் கம்பரன்றி வேறொருவர் காண்டலரிது. அவ்வாறே, 'அன்னையரனைவரும்' எனக் கைகேசியையும் உட்படுத்தி உரைக்க வல்லவனும் அக் கம்பரிடந் தன் குணங்களைக் கற்றுத் தேர்ந்த இராமனேயாவான். வான்மீகிமுனிவர்பாற் பயின்ற இராமனோ,

"சுமித்திரையின் புதல்வா, நீயும் என்னுடன் காட்டுக்கு வந்துவிட்டால், நமது அன்னையரான கௌசலையை யாவது மிக்க புகழுடைய சுமித்திரையையாவது யார் காப்பாற்றுவார்... அரசராகிய நமது தந்தை இப்பொழுது மன்மதன் வலையிற் சிக்கியிருக்கின்றார். கைகேசியும் இத்தேசத்தை யடைந்தபின்னர், வருத்தமடைந்திருக்குற் தன் சக்களத்திகளுக்கு நன்மையை நடத்தமாட்டார். கைகேசியின் வசத்தில் நிற்கும் பரதனும் இராச்சியத்தை யடைந்தபிறகு, மிகவுந் துக்கத்தை யடைந்த கௌசலையையும் சுமித்திரையையும் நினைக்கவும் மாட்டான்.

ஆகையால் நீ இவ்விடத்திலிருந்துகொண்டு சுயமாயாவது அரசனுடைய உதவியினாலாவது ஆர்யையான கௌசலையைப் பாதுகாப்பாய். நான் சொன்ன இதைத் தவறாது செய்க......இரகுவம்சத்தைக் களிக்கச் செய்பவனே, எனக்காக நீ இப்படிச் செய்யவேண்டும்''

என்று செப்பினான். "எனக்காக நீ இப்படிச் செய்யவேண்டும், தவறாது செய்க" என்பதனை யெல்லாம், 'மறுக்கிலாது உன்னை நீ என்பொருட் டுதவுவாய்' என மொழிபெயர்த்து அமைத்துக்கொண்ட கம்பர், ஆயிரம் இராமரும் இவன் கேளாகாத் தள்ளரும் பெரும்புகழ்ப் பரதனைப்பற்றிய பழிமொழிகளையும், தந்தையைப்போய்க் காமன்வலையில் சிக்கியதாகக் கழறும் தகவில் சொற்களையும், பெருந்தகை இராகவன் வாயினின்று கழித்ததுமன்றி, கைகேசியும் வருந்தினாளென்றும் அவளும் காப்பதற்குரியவளென்றும், அன்னைய ரனைவருள் கூட்டி யுரைக்கும்படி செய்த திறத்தினால் இராமனது மாயாப் பெரும்புகழ்க்குப் பேருதவி செய்தவராகின்றார். பரதன்றன் தனிப்பெருந் தகைமையைக் குறைத்தும், கைகேசியின் கொடுமையை அளவிறந்தும், உள்ளூற மதித்திலனேனும், இலக்குவனைத் தன்னுடன் வாராமல் தடுப்பதற்கோர் விரகு சூழ்ந்துரைத்த வாசகம் அது என்னக் கொள்ளினும், மெய்யாய மாண்பிற்குப் பலபடி பின்னிற்கும் புணர்ப்பே ஆதுமன்றி உயர்நிலையெய்தியதென் றெண்ணுதற் கொண்ணாமலே தீர்ந்ததாகும். இவ்வாறு இராமன் இயம்பவும் இலக்குவனை பரதனுக்குப் பிணையாகி உறுதிநின்று,

"வீரரே, தங்கள்பராக்கிரமத்தால், பரதர் நியமம் பூண்டவராய்க் கௌசலைக்குஞ் சுமித்திரைக்கும் மரியாதை செய்வார். இதில் சந்தேகம் வேண்டாம்......கௌசலைதன்னையும் காத்துக்கொண்டு சுமித்திரையையும் காக்க இயல்பவள்......ஆகையால் என்னை உடன்வருபவனாகச் செய்யுங்கள்; இதில் ஒருவிதமான தவறுமில்லை, நானும் கிருதார்த்தனாவேன்; உங்களுடைய தொழிலும் நன்றாகக் கைகூடும். நான், கையில் பாணத்தோடு கூடிய விற்பிடித்து, மண்வெட்டியும் சிறுகூடையும் எடுத்துக்கொண்டு தங்கள் முன்னே நடந்து போவேன். தினந்தோறும் கிழங்குகள், பழங்கள், இன்னும் தவசிகள் புசிக்கும் காட்டிலுண்டாகும் இனிய உணவுகள் ஆகிய எல்லாவற்றையும் கொண்டுவந்து தங்களுக்குக் கொடுப்பேன். தாங்களும் சீதையும் சந்தோஷமாகத் தாழ்வரைகளில் விளையாடலாம். தாங்கள் விழித்திருக்கும் பொழுதுந் தூங்கும்பொழுதும் தங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் என் பேருகச் செய்வேன்''

எனத் தான் உடன்வருவதன் ஊதியத்தையுங் காட்டினான். உன்னை நீ என்பொருட்டுதவுவாய் என்றதற்கு இலக்குவன் தனக்கியன்றவாறு உறுபொருள் உணர்த்தியது போன்றிருக்கின்றதிது.

"இராமர், இப்படி இலக்குமணன் சொன்னதைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்து, தமது தம்பியைப் பார்த்து, "இலக்குமண, சீக்கிரம் எல்லா நண்பர்களிடமும் விடைபெற்று என்னுடன் காட்டிற்கு வா''

என்றனன், என வால்மீகிமுனிவர் இயம்புகின்றனர். இராமன், 'வெகுசந்தோஷ மடைந்தது' எதற்கென்பதை மிக்க பெருந்தன்மையோடு ஊகிக்கப்புகாதார் விபரீதங்கண்டுவிடுவார். ஷேக்ஸ்பியர் எழுதிய 'கடுங்காற்று' என்னும் நாடகத்தில், மிருகத்தன்மை மாறாதவோர் குரூரக்கவந்தன்போன்றகாலிபன் என்னும்பேய்மகன், குடிகாரமடையன் ஸ்டிபானோ என்பவனைத் தன் தலைவனுந் தெய்வமும்போல் ஆக்கிக்கொண்டு தான் அவனை வழிபட்டுத் தொண்டுசெய்யற் கிடந்தருளினால், எவ்வகை நல்லுதவிகள் தன்னால் புரிதற்கியலுமென்று பின்வருமாறு கூறுகின்றான்:—

I'll show thee every fertile
inch of the island
And kiss thy foot: I pr'ythee, be my god.
I'll show thee the best springs; I'll
pluck thee berries;
I'll fish for thee, and get thee wood
enough.
I pr'ythee, let me bring thee where
crabs grow;
And I with my long nails will dig thee
pig-nuts;
Show thee a jay's nest, and instruct
thee how
To snare the nimble marmozet; I'll
bring thee
To clust'ring filberts, and sometimes
I will get thee
Young sea-snails from the rock:
Wilt thou go with me.

நண்டிற்கும் நத்தைக்கும் மாறாய்க் காயுங்கிழங்குமாகித் தொனிப்பதல்லால், காலிபனது கூற்றினெதிரொலியை இலக்குவன் வாக்கில் அங்கு வான்மீகி இராமாயணத்துள் கேட்கவேண்டி வருகின்றதே. இவ்வண்ணந் தனக்கு இணங்கிய ஏவலாளன் ஒருவன் நேர்ந்தானென்றோ இராமன் அங்கு 'வெகு சந்தோஷமடைந்தான்?' அல்லது, இளையோன் பணிகேட்டுப் புறங்காக்கத் "தானுஞ் சீதையும் தாழ்வரைகளில் சந்தோஷமாக விளையாடலாம்'' என்பதை எதிர்நோக்கியோ? என்றெல்லாம் ஐயுறும்படி பலபடறுவன்ற அவ்வாக்கியங்களினிடையே துழாவி,பரதனை இலக்குவன் பெருமைபாராட்டிப் பேசியதற்கே இராமன் 'வெகுசந்தோஷமடைந்தான்' என்று கொண்டக்கால் எம்மனோர் மனஞ் சிறிது ஆறலாம்.

வடநூல் வழிப்படி தன்னுடன் தம்பி இலக்குவன் அடவி வருதற்கு இராகவன் இசைந்தவாறு அவ்வாறு. இனிக் கம்பர் முறையைத் தொடர்ந்து பார்க்கலாம். துயரின் மூழ்கிய அன்னையரனைவரும் ஆழிவேந்தனும் இடருறுவகை, உன்னை நீ என்பொருட்டுதவுவாய், என

ஆண்டகை யம்மொழி பகர வன்பனுந்
தூண்டகு திரள்புயந் துளங்கத் துண்ணென
மீண்டதோ ருயிரிடை விம்ம விம்முவான்
ஈண்டெனக் கடியனேன் பிழைத்த தியாதென்றான்

[புருடர்களிற் சிறந்தவனான இராமன் அவ் வார்த்தைகளைக் கூற, அன்பனாகிய இலக்குமணனும், தூண்களைப் போன்ற தன் திரண்ட தோள்கள் துண்ணெனக் குலுங்க, மீண்டு வந்த வோர் உயிர் இடையில் கலங்கும்படி அழுவானாகி, " அடியேன் இப்பொழுது உனக்கு இழைத்த பிழை யாது—என்றான்]

பிழை யெதுவேனும், உன்னைப் பிரிதலென்னும் பெருந் தண்டனையால் ஒறுத்தல் ஒண்ணாதென்னப் பின்னும்,

நீருள வெனினுள மீனு நீலமும்
பாருள வெனினுள பாரம் பொற்புற
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையு
மாருள ரெனினுளெ மருளு வரயென்றான்

[அழகிற்கோர் நாணினையுடைய வில்லையுடையவனே, நீரிருந்தால்தான் மீனும் நீலமலரும் இருக்கும். பூமியிருந்தால்தான் பொருள்களுக்குப் பாரம் உளது. மற்று, யாரிருந்தால், நானும் சீதையும் இருப்பவராவோம், சொல்லியருள்க—என்றான்]

'வேண்டாதாரை வெல்லற்கின்றி அழகிற்கே ஓர் நாரினை நாணென்னக் கட்டிய வில்லுடைய எளியோனே' என்னப் பரிகசித்தானாயினும், அது பரிவினால் பகர்ந்ததேயன்றிப் பகைமையாலன்று. உன்னுடன் ஒட்டியுலரும் உறவினேம் எம்மை விட்டேகல் நீதியோ என வேண்டினன். ஒரு பொருளின் பாரம் (Weight) பூமியின் ஆகர்ஷண சக்தியால் (Gravitation) ஏற்படுவதே யன்றி வேறன்று என்பதை இக்கால பூத தத்துவ சாஸ்திர நிபுணர்கள் (Physicists) உரைப்பார். பொருளால் பூமிக்குப் பாரமிலது, பூமியாற்றான் பொருளுக்குப் பாரம் என்னுமிவ்வுண்மையை நெடிது நாட்களுக்கு முன்னர்க் கம்பர் கற்றுத்தான் கூறினரோ, மற்றியாதோ அறிதலொல்லோம்.

இராமன் எதிரியம்பாதது நோக்கிப் பின்னும் பகர்வான் அன்புடைய தம்பி இலக்குவன்;

பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மகளைந்துயிர் நடுங்கவு நடத்தி கானென
உய்ந்தன ளிருந்தன னுண்மைக் காவலென்
மைந்தனென் றினையசொல் வழங்கி னாயென

[பைம்பொன் வளையல்களை யணிந்த ஒருத்தியின் வார்த்தையைக் கேட்டு, பூமிதேவி வாடி உயிர் நடுங்கவும், காட்டிற்குப் போ என்று ஏவியும் உயிர்பிழைத்திருக்கின்ற அச் சத்தியசந்தனும் அரசனுடைய மைந்தன் ஆதலாலோ (யான் உன்னுடன் வரவேண்டாவென்ன) இத்தகைய மொழிகளைப் பேசுகின்றாய்—என்றான்.]

'உண்மைக் காவலன்' என்பதனுள் அடங்கிய வஞ்சப்புகழ்ச்சி கிடக்க, ஈற்றடி ஏற்றிருக்கும் இரட்டுறமொழிதலுத்திக்கு இணையொன்று வேறு நாடலரிது. " உண்மையைக் காக்கின்றேன் என்ற பெயரால், பைந்தொடியொருத்தியின் சொல்லிற்கு அடிமையாகிஉன்னைக் காட்டிற்குப் போக்கித் தன்னுயிரையே காத்துக்கொள்கின்ற வன்னெஞ்ச மன்னன் மைந்தனாய் நீ இருத்தலாலன்றோ,என்பால்இரக்கமின்றிஎன்னை உன்னுடன் வாரல் என்று விதிக்கின்றாய்'' என்ன மன்னனை முன்னிட்டு இராமனை ஏசியவாங்கே, " அன்னதோர் மன்னன்றன் மைந்தனாய்ப் பிறந்த பாவி யான், எதனையுந் தாங்குவேன் என்னுங் கொள்கையாலோ நதியம்பினாய்'' என்னத் தன்னையும் ஏசிக்கொண்டு எளிமைகூர நிற்கின்ற நீர்மையும் பிரியா துடனிழையுந் திறமை சாலப்பெரிது. உரைப்போன் தன்மையும் உரைக்கப்படுவோன் தன்மையும் இன்னதாக, உரையின்கொடுமையோ,

மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
வேறின வெகுளியை யாது முற்றுற
வாறினை தவிர்கென வைய வாணையிற்
கூறின மொழியினுங் கொடிய தாமென்றான்

[நீ வனம் செல்வாயென யான் கொண்ட கோபத்தை முற்றிலுந் தணியும்படி நீ இட்ட ஆணையினும், ஐயனே, இப்பொழுது என்னை வரவேண்டாவென்றுரைக்கு மிது மிகக் கொடியது - வேறென்ன, என்றான்] என்று பின்னரும்,

செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்தெமைக்
கைதுடைத் தேகவுங் கடவை யோவையா
நெய்துடைத் தடையலர் நேய மாதர்கண்
மைதுடைத் துறைபுகும் வயங்கொள் வேலினாய்

[பூசிய நெய்யையும், பகைவர்களுடைய விருப்பத்திற்குரிய மாதர்தம் கண்களிலுள்ள மையையும் துடைத்து உறையிலிடுகின்ற வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய தலைவனே, உனக்குரிய செல்வமெல்லாவற்றையும் நீங்கி, என்னையும் சீதையையும் கைதுடைத்துவிட்டுப் போகக் கடவாயோ—என்றான்]

"என்னைக் கொண்டேகினால் காயுங் கிழங்குந் கிண்டித்தருவேன்; இவ்வூதியம் நினக்குளது'' என்னாது, "என்னைப் பிரிந்தேகல் நினக்கு நீதியோ, யானும் பின்னுய்வேனோ'' என அன்பினோடு இலக்குவன் இவ்வண்ணம் இடித்து,

உரைத்தபின் னிராமனொன் றுரைக்க நேர்ந்திலன்
வரைத்தடந் தோளினான் வதன நோக்கினன்
விரைத்தடந் தாமரைக் கண்ணின் மிக்கநீர்
நிரைத்திடை யிடைவிழ நெடிது நிற்கின்றான்

[உரைத்தபின், இராமன் ஒன்றும் இயம்ப இயலாதவனாய், மலைபோன்ற பெரிய தோள்களையுடைய தம்பியின் முகத்தை நோக்கி, வாசனைபொருந்திய பெரிய தாமரை போன்ற தன் கண்களினின்று பொங்கிய நீர் நிரைத்து இடை இடை விழுவதாக நெடிதுநேரம் சும்மா நிற்பவனாயினன்.]

இன்னணம், "உன்னை நீ என்பொருட்டு உதவுவாய்'' என்றதற் கெதிராக, "என்னை நீ என்பொருட்டு ஏற்றுக்கொள்'' என வற்புறுத்துந் தம்பியை நோக்கி உள்ளங்கரைந்து கண்ணீர் உகுத்து நின்ற இராமன் பின் யாது நிகழ்த்தியிருப்பானோ என்பது தெரிதற்கில்லை. ஏனெனின், அச் செவ்வியில்,

அவ்வயி னரசவை நின்று மன்பின
னெவ்வமி லிருந்தவ முனிவ னெய்தினான்
செவ்விய குமாருஞ் சென்னி தாழ்ந்தனர்[தான்
கவ்வையம் பெருங்கடன் முனியுங் கால்வைத்

[இராசசபையை விட்டு, அன்போடு, குறைவற்ற தவமுடைய வசிட்டமுனிவன் அவ்விடம் வந்து எய்தினான், செவ்விய குமரரும் சிரம் வணங்கினர். முனிவனும், துயரமாகிய பெருங்கடலில் கால்வைத் திறங்கத்தொடங்கினான்]

முக்காலமும் நுனித்தறியு மிவ்வேதியன் இன்னலொன்று மின்று கொள்ளற்பாலனல்லன். எனினும்,

அன்னவர் முகத்தினொ டகத்தை நோக்கினன்
பொன்னரைச் சீரையின் பொலிவு நோக்கினு
னென்னினி யுணர்த்துவ தெடுத்த துன்பத்தாற்
றன்னையு முணர்ந்தில னுணருந் தன்மையான்

[அவ்விருவர் முகமும் அகமும் நோக்கினன். அழகிய பொன்னாடை உடுக்கவேண்டிய அரையில் தரித்திருக்கும் மரவுரியின் அழகை நோக்கினன்—வேறென்ன—எல்லாம் உணரும் தன்மையனான அம்முனிவனும், விளைந்த துன்பத்தால், தன்னையே உணராதவயினன்]

எனக் காட்டுகின்றார் கம்பர். நாடகத்தலைவனான இராமனை ஒவ்வோர்வேளை தானுடுவது மாயக்கூத்தென்பதை மறக்கின்றானென்றால், உதவிப் பாத்திரமாம் வசிட்டனுஞ் சிறிது மறப்பது பெரியதோர் குறையாமோ.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

27. பரகாயப் பிரவேசம்

[553-வது பக்கத் தொடர்ச்சி]

பரகாயப் பிரவேசமென்பது "கூடுவிட்டுக் கூடுபாய்தல்" என்னும் ஒருவகைக்கலை. இது அப்பருக்கு முன்னிருந்த விக்கிரமாதித்தனென்னும் அரசனும், அவருக்குப் பின்வந்த ஆரிய வேதாந்த குருமூர்த்தியாகிய சங்கராசாரியரும் கையாண்ட கலையாகும். எனவே அப்பர்காலத்தில் பரகாயப் பிரவேசமென்னும் கலையும் பரவியிருந்ததென்னும் விஷயம் நாம் அநுமானிக்கலாகும். ஆயினும் இச்சித்தி யோகப்பயிற்சியாற் பெறினும், முத்தி உதவாதென்பது கருதி நமதுசமயாசாரியர்கள் அதைப்பெரும்பாலும் எடுத்துக்காட்டிப்புகழவில்லை. "மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்... சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது சத்தாகியென் சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே தேசோன்மயா னந்தமே" என்று தாயுமானவர் கூறியதுபோல், ஞானம் பெறுதோர், இப் பெருங்கலை பெற்று வாழ்வது * பயினில் வாழ்வென எண்ணினர் போலும்.

இதன்றியும் இக்கலையிற் பயில்வோர் ‡ சிவஞான சம்பத்துப்பெற்று விளங்குவாரெனினும இக்கலையால் விளையும் விளையாட்டு அவர்களுக்கும் அநாசாரச் செய்கையன்றி ஆசாரமாகாது. இத்தகையோகவிளையாட்டுக்களைக் கருதியோ "குறையாத வுவகைக்கண்ணீர் ஆறாத வானந்தத் தடியார்செய்த அநாசாரம்" என அடியிற் கண்ட பாசுரத்தில் குறிப்பிட்டார் என்பது நிச்சயிக்கக் கூடவில்லை.

> நீறாகி நீறுமிழு நெருப்பு மாகி
> நினைவாகி நினைவினிய மலையான் மங்கை
> கூறாகிக் கூற்றாகிக் கோது மாகிக்
> குறையாத உவகைக் கண்ணீர்
> ஆறாத வானந்தத் தடியார் செய்த
> அநாசாரம்பொறுத்தருளி யவர்மேலென்றுஞ்
> சீறாத பெருமானைத் திருமாற் பேற்றென்[றனே
> செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தே
>
> திருமாற்பேறு திருத்தாண்டகம்-5.

திருநாவுக்கரசுநாயனார் தான் யோகியென்று வெளியிடாவிடினும், அவர் தேவாரத்தில் ஆங்காங்குக்காணப்படும் *சொற்றொடர்கள், அவர் 'பெருகுநிலைக் குறியாளர் அறிவு பெற்றவர்' என்றும் வெளியிடுவதுடன், தேகத்தின் ஊனத்தை வென்றவரென்றும் பழைய வினைகளாலுண்டாகும் பயமுதலியன கடந்தவரென்றும், அவர் தேகம் யோகப்பயிர்ச்சியால் நிறைந்த தவத்தோர் பயன்பெற்ற தென்றும் குறிக்கும்:—

> கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
> கற்றோர்க ளுற்றோருங் காதலானைப்
> பொல்லாத நெறியுகந்தார் புரங்கண் மூன்றும்
> பொன்றவிழ வன்றுபொரு சரந்தொட் டானை
> நில்லாத நிணக்குரம்பைப் பிணக்க நீங்க
> நிறைதவத்தை யடியேற்கு நிறைவித் தென்றும்
> செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைச்
> செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே.
>
> திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம்.

தேகமானது யோகத்தால் எவ்வளவு பழகித் திருந்திய போதிலும் நமது இஷ்டத்திற்கு முரணாயிருப்பது அதன் குணமாகும். ஆகையால் இத்தேகத்தினிடையேயுள்ள சூக்கும சரீரத்தைப் பெயர்த்து மற்றொரு சரீரத்தில் புகுவிப்பதென்றால் அச்சந்தியிலுள்ள கஷ்டங்கள் சாமானியமானவல்ல. தேகத்திலுள்ள தெய்வத்தின் துணையைக்கொண்டு செய்தாலன்றி இது கைகூடாத காரியமாகும். காயத்தைச் சித்திசெய்த பிறகு, சூக்கும சரீரமானது ஸ்தூலத்தை விட்டுப் பிரிந்தபோதும் ஸ்தூலசரீரம் அழியாது பலகால மிருக்கக் குளிகைகளிடுவதும் தனஞ்செயவாயு மாறாது நிலைநிற்கச் செய்வதும் இக்கலையின் நுணுக்கங்களாம். ஆயினும் இவ்வகைக் காரியங்கள் செய்வது தெய்வத்தன்மையாய் உலகிற்கு நன்மைவிளைவிக்கவும், தன் சுயநலம் கருதாதிருக்கவும் எண்ணியவருக்கு மாத்திரமே நன்மை பயக்கும். ஏனெனில் சிவபெருமான் சந்தியாய், சந்தியினின்று தவநெறிதரித்து நின்றவராதலால், அசுத்த சிந்தனையுடையவர் இக்கலையைப் பெறுவாராயின் அவருக்குப் பெரிய ஆபத்து விளையுமென்பது திண்ணம். இக்கருத்துக்களை உள்ளடக்கியோ அல்லது வேறு எதனை யெண்ணியோ திருநாவுக்கரசர், சிவபெருமானைப் பரவுங்கால்

> முந்தையார் முந்தியுள்ளார் மூவர்க்கு முதல்வரானார்
> சந்தியார் சந்தி யுள்ளார் தவநெறி தரித்து நின்றார்
> சிந்தையார் சிந்தை யுள்ளார் சிவநெறி யனைத்துமானார்
> எந்தையா ரெம்பி ரானாரிடைமரு திடங்கொண்டாரே
>
> திருவிடைமருதூர் - திருநேரிசை 2.

என்றார் போலும். அவர் கைவல்லிய நிலையும் அத் திருப்பதியின் கண்ணே பாடிய மற்றொரு பதிகத்தில் விளங்குவது காண்க:—

> மனத்துண் மாயனை மாசறு சோதியைப்
> புனிற்றுப் பிள்ளை வெள்ளம் மதிசூடியை
> யெனக்குத் தாயை யெம்மானிடை மருதனை
> நினைத்திட் டூறி நிறைந்ததென் னுள்ளமே.
>
> திருவிடைமருதூர்-திருக்குறுந்தொகை. 2

இத்தகைய யோகசித்தியின் அற்புதங்களை எடுத்துக்காட்ட அப்பர் விரும்பினவராய்க் காணப்படவில்லை. இவ்விஷயங்களையடக்கித்தேகதத்துவ நிலையை யோகசித்தியில் பயன் படுத்துவது எவ்வெக் காரணங்களாலென்று கூறும்போது யாதும் வெளிப்படையின்றி, ஏனைய பதிகங்களில் அவர் விஷயங்களை விளக்குவதுபோல் விளக்காது, மிகவும் கடினமான தமிழ் நடையில் பாடுவதுடன் சொற்றொடர்கள் நமக்குப் பலவகைப் பொருள் தரும்படி அப்பர் பாடுவது காணலாம்:—

> ஐயிரண்டு மாறொன்று மானார் போலும்
> அறுமூன்று நான்மூன்று மானார் போலும்
> செய்வினைக ணல்வினைக ளானார் போலும்
> திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
> கொய்மலராங் கொன்றை சடையார் போலும்
> கூத்தாட வல்ல குழகர் போலும்
> எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலு
> மிடைமருது மேவிய வீசனாரே.
> பிரியாது குணமுயிர்கட் கைந்தோ டைந்தாய்ப்
> பிரிவுடைய குணம்பேசிற் பத்தோடொன்றாய்
> விரியாத குணமொருநான்கே யென்பர்
> விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
> தெரிவாய குணமஞ்சும் சமிதை யஞ்சும்
> பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பினாரும்
> எரியாய தாமரைமே லிலங்கி னாரும்
> இடைமருது மேவிய வீசனாரே.
>
> திருவிடைமருதூர் - திருத்தாண்டகம் 6 & 7.

* ஊனேக்கு மின்பம் வேண்டி யுழலாதே
வானேக்கும் வழி யாவது நின்மினோ
தானேக்குந் தன்ன டியவர் நாவினிற்
றேனேக்குந் திருவெண் காடடை நெஞ்சே.
திருவெண்காடு-திருக்குறுந்தொகை. 2.

‡ செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்த தும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள்கோழைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமுற்
பேராகோய்தா மேயாமைப் பிரிவுசெய்த வனிடம்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணுதாரே சேராமெய்க் கழுமல வளநகரே.
சம்பந்தர்

* பிறவி மாயப் பிணக்கி லழுந்தினும்
உறவெ லாஞ்சிந்தித் துன்னி யுகவாதே
அறவெ னெம்பிரா னன்பிலா லந்துறை
மறவா தேதொழு தேத்தி வணங்குமே.
திருஅன்பிலாலந்துறை-திருக்குறுந்தொகை 7.

இழுதையர் தன்மை.

கீழ்வருவன புத்தமதத்தினர் போற்றும் தர்மபதம் என்னும் அறநூலினின்று எடுக்கப்பட்ட சில அரிய மொழிகளின் மொழிபெயர்ப்பாகும்:—

கண்விழித்திருப்போர்க்கு இரவு நெடிது, நெடிது; சோர்வினாற் றளர்ந்தார்க்கு ஒரு மைலின் அளவும் மிக மிக நீளமாகும்; மெய்ந்நெறி தெரியாப் பேதையர்க்கு வாழ்வின்காலம் மிகமிக நெடிதே.

* * *

வழிப்போக்கனொருவன் தான் வழிநடக்குங்கால், தன்னினும் உயர்ந்தாரோ அல்லது இணையாவாரோ துணைவரநேராதுபோகுமாயின், அவன் துணையொன்றுமில்லாது தனி நடப்பதே சாலச் சிறந்தது; இழுதையர்களோடு உறவோ இல்லை.

* * *

'இவர் நான் பெற்றெடுத்த பிள்ளைகள்' இது எனக்கு உடைமையான சொத்துக்கள்' என்ற வெண்ணங்களால் அலைக்கப்பெற்றுத் துன்புறுகின்றனர் பேதைமாக்கள். தனக்குத் தானே உடைமையிலாதிருக்க ஐயா, சொத்தும் பிள்ளைகுட்டிகளும் உடைமைக்குரியவைகளாவது எங்ஙனம்?

* * *

தன் பேதமை தெரிந்த முட்டாள் ஒருவன், தனது பேதமையைத் தெரிந்துகொண்டுள அளவிற்கேற்றபடி அறிந்தவனாகின்றான். 'தான் எல்லாம் தெரிந்தவன்' என்று இறும்பூதெய்தும் ஒருவன் முழுமுட்டாளேயாவான்.

* * *

சிறிதும் அறிவிலாப் பேதையொருவன் தன் வாழ்நாள் முழுதும், அறிவினால் உயர்ந்த பெரியாருடன் பழகி வாழ்ந்தானாலும், எப்படிக் கரண்டியானது உண்டியின் சுவையை அறியாதோ, அப்படியே அவனும் மெய்ம்மையின் பெருமையை அறியமாட்டான்.

* * *

அறியும் புத்தி உடைய ஒருவன் அறிஞரோடு ஒரு நிமிடநேரம் பழகினாலும் போதும்; உண்டியின் சுவையை நாக்கு அறிவதுபோல், மெய்ம்மையின் இலக்கணத்தை அறிந்துவிடுவான்.

* * *

புத்தியின் விளக்கமில்லா இழுதைகள் தங்களுக்குத் தாங்களே பகையாய் அமைகின்றனர். ஏனெனில் அவர் தமக்குக் கேடையே கொடுக்கவல்ல தொழில்களையே செய்துகொள்வர்.

* * *

உலகாதி அனுபவத்திற்கு [illegible] வாண நிலையை எய்துவதற் [illegible] பாதையோ வேறு.

பெரியோர் இயல்பு.

தர்மநூல்கள் விதித்தபடி எவன் வாழ்க்கையில் நடக்கின்றானோ, அவன் அலைவுறா மனச்செம்மையுடன் இனிது வாழ்கின்றான். மஹான்கள் அறவழி கடவா திருப்பதாற்றான் நிரந்தர இன்பத்தில் தோய்பவரா யிருக்கின்றனர்.

* * *

கிணறுதோண்டும் தொழிலுடையோர் தாம் போகுமிடங்களில் விரும்பினாற் கிணறு தோண்டிவிடுவர். வேடர் விற்களை வளைத்து விடுவர். தச்சன் மரத்துண்டை வளையவைப்பான்; ஆனால் அறிஞரோ தங்களையே முறைவழி திருத்தி அமைத்துக்கொள்வர். எத்துணைவிசையுடைய கடுங்காற்றும் மலைகளை அசைத்துவிடுவதில்லை. அம்மலை போன்றவர் பெரியோர். புகழ்உரையும் பழிமொழியும் எதனாலும் அறிவுடைய பெரியோர் அசையமாட்டார்.

* * *

அறநூல் வகுத்துளதைக் கேட்டறிந்ததும் பெரியோர், ஆழமுடனகன்றவொரு ஏரிபோல் சலனமற்று இருப்பர்.

* * *

செல்வம் செல்வாக்கு மக்கட்பேறு ஆயவைகளைப் பெரியோர் தமக்கென்றோ, பிறர்பொருட்டோ விழைவதில்லை. தனக்கென்றோ பிறர்க்கென்றோ யாதும் விழையாதவன் அறிஞனாகின்றான்.

* * *

துக்கம் சுகம் என்ற பாகுபாடு பெரியோர்மாட்டு இல்லை. எந்நிலை வந்துற்றகாலத்தும் சிறிதும் மனவமைதிகெடாது தமதுநிலையில் அவர் தலைநிற்பர். துக்கத்தால் சோர்வதும் சந்தோஷத்தால் மதர்ப்பதும் பெரியோர் இலக்கணமன்று.

* * *

கெட்டவனது நட்பு உனக்கு வேண்டா. நல்லவர்களைப் பின்பற்றிச் செல்வாய். மனிதரில் சிறந்தோனே நட்பிற்குரியவன். அவனை அடைந்தார்க்கு உய்வுண்டு.

* * *

பெரியோர் நல்லது இதுவென்று காட்டுவார், கெட்டது இதுவென்று விலக்கி வைப்பார். ஆனால் கோபித்துக்கொள்ளமாட்டார்; உபதேசமே செய்வார். அத்தகையோரை நல்லவர் ஏற்றுப் போற்றுவார், தீயோர் வெறுப்பர்.

* * *

இவ் வாழ்க்கையாகிய கடலின் அக்கரை சேருபவர் [illegible]ரில் மிகச் சிலரே ஆவார். பெரும்பகுதியோர் இக்[illegible]யிலேயே வழிதெரியாது அலைந்து திரிகின்றார்.

18927

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவாரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை: —இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி: —(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32.
மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட்,

சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினல் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைக ளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம்! இனம்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்: —நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.

கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை! நிறைந்த விஷயம்!
சிறந்த கதை! உயர்ந்த பதிப்பு!

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்

ஸ்ரீமான். மாங்கை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மைலாப்பூர், மதறாஸ்.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலாநிலய முன்னைய இதழ்கள்

மூன்றுண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பாலகாண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றுமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. 10—8—0, வெளிநாடு ரூ.12—0—0.

விலாசம்:— (தபால் சார்ஜ் உள்பட.)

கலா நிலயம், புரசைபாக்கம், சென்னை.

பண்டாரம் மாந்த எண்ணை

சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு உண்டாகும் மலச்சிக்கல், மாந்தம், இழுப்பு, ஜுரக் கட்டி, முதலியவைகளை ஆரம்பத்திலேயே வரவொட்டாமல் தடுத்துக் குழந்தைகளை நன்றாய்க் காப்பாற்றும் சஞ்சீவி எண்ணை.

விலை அணு 12. எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

எம். சி. என்ஸ். எக்லெக்டிக் பார்மசி & டிஸ்பென்ஸரி,
49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

திரு அருட்பா

வசனப்பகுதி

ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்

அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணுவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணுவும், ஆக, 5 அணு தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

வர்த்தமானம்

இந்தியர் காய் கிழங்குகளையும் கீரைகளையும் உணவுப்பொருளாய்க் கொள்வதுபோல் ஜப்பான் தேசத்தாரும் சீனர்களும் புஷ்பங்களை உணவுப் பொருளாய்க் கொள்கின்றனராம்.

***

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவரான ஸ்ரீமான் எஸ். ராமநாதன் என்பவர் சுயமரியாதைக் கட்சியினர் பிரதிநிதியாக ருஷ்யா செல்கின்றனராம்.

***

இங்கிலாந்திலுள்ள எடின்பரோ என்னும் நகரத்தைச்சேர்ந்த ஜேன் ப்ரீஸ் என்னும் மாது இந்துமதத்தை ஏற்றுக்கொண்டனள் என்றும், இப்பொழுது அவளது பேர் சரத்குமாரி என்றும், அவளுக்கு வயது 30 தான் என்றும் ஒரு அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

துருக்கியில் தேகம் பருத்தவர்களனைவோரும் சேர்ந்து ஒரு சங்கம் ஸ்தாபித்துள்ளனர் என்றும், அச்சங்கத்தின் பிரதிநிதிகளாக 150 பருத்த மனிதர்கள் இப்பொழுது உடம்பு பருமனு யிருப்பதின் நலம் பற்றி இங்கிலாந்தில் பிரசாரம் செய்துவருகின்றனர் என்றும், அவர்கள் ஐரோப்பிய நாடுகள் முழுதும் சென்று பிரசாரம் செய்வாரென்றும் ஒரு அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

"உலகத்தில் ஏற்பட்டிருக்கின்ற பண நெருக்கடியும், வியாபாரக் குறைவும், ஜப்பான் அரசாங்க வருமானத்தைக் குறைக்கலாயின. எனவே ஜப்பான் அரசாங்கத்தார் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் 100-க்கு 10 வீதம் குறைத்தனர். ஜப்பானில் உள்ள ஒரு பெரிய கைத்தொழில் சாலையிலுள்ள தொழிலாளர்கள், தங்களது சம்பளத்திலும் 100-க்கு 10 வீதம் குறைத்துவிடுமாறு முதலாளிகளுக்கு மனுச் செய்துகொண்டனர். ஆனால் முதலாளிகள் அப்படிச் செய்ய மறுத்தனர். தொழிலாளிகள் சம்பளம் குறைக்காவிடில் தாங்கள் வேலை செய்யமுடியாதெனப் பிடிவாதம் செய்யவே முதலாளிகள் வேறுவழியின்றிச் சம்பளத்தைக் குறைத்தனர்" என்று ஒரு அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

இந்தூர் சமஸ்தானத்தில் இறந்தவர்களுக்குச் செய்யும் கருமங்களில் 10 பேருக்கு மேற்பட்ட தொகையினருக்குச் சாப்பாடு போடுதல் கூடாதென்று இந்தூர் சமஸ்தானத்தார் ஒரு சட்டம் செய்திருக்கின்றனர் என்றும், ஜனங்கள் இப்படிச் செலவு செய்வதால் கடன்காரர்களாய்ப் போய்க் கஷ்டப்பட நேரிடுகின்றதென்பது அரசாங்கத்தார் அபிப்பிராயம் என்றும் ஒரு செய்தி லோகோபகாரியில் காணப்படுகின்றது.

விக்டர் சசூன் என்பவர் பம்பாயிலுள்ள மில் சொந்தக்காரர்களில் மிகப்பணக்காரர். சத்தியாக்கிரஹ இயக்கத்தால் அவருக்கு நஷ்டம் அதிகம். எனவே அவர் தமது மில்லை மூடிவிட்டு இங்கிலாந்திற்குப் புறப்படுகின்றார்.

***

காந்தியடிகள் லண்டனுக்குச் செல்லும்பொழுது அவருடன் தேவதாஸ் காந்தி, மகாதேவ தேசாய், பியாரிலால், மீராபாய் என்னும் ஆங்கில மாது, ஆகிய இந்நால்வர் அவருடன் செல்வார்கள். ஒரு பத்திரிகைப் பிரதிநிதியிடம் அவர் கூறியதாவது:—"எனக்கு ரவுண்டேபில் மஹாநாடு விஷயமாக யோசனை கூறக் கடவுளையே அழைத்துச் செல்லப்போகின்றேன்."

***

சென்றவார இறுதியில் சென்னையில் டாக்டர் C. நடேசமுதலியார் தலைமையில் மருத்துவர் சங்கக் கூட்டம் நடைபெற்றது. மருத்துவ வகுப்பினருக்கு இலவசப் படிப்புக்குரிய வசதி அளிக்கப்படவேண்டுமென்றும், அரசாங்கத்தில் செல்வாக்குப் பெறும் வழியில் இவ்வகுப்பினர் முன்னேறவேண்டும் என்றும், தமிழ்நாடெங்கும் சங்கங்களை நிறுவிப் பிரசாரம் செய்யவேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

***

லண்டனில் கூடவிருக்கும் ரவுண்டேபில் மஹாநாட்டிற்குப் புதிய பிரதிநிதிகள் சிலர் நியமிக்கப் பெற்றிருக்கின்றனர். அவர்களில், ஸ்ரீபண்டிதர் மதன் மோஹன்மாளவியா, ஹிந்து ஆசிரியர் ஸ்ரீமான் ஏ. இரங்கஸாமி ஐயங்கார் முக்கியமானவர்களாவார்கள்

***

புதுக்கோட்டைக் கலக விபரம்:—"புதுக்கோட்டை சமஸ்தானத்தார் அரசாங்கத்தில் வருமானக்குறைவு ஏற்படவே, வீட்டுவரியைச் சிறிது உயர்த்தினர். ஜனங்கள் இவ்வதிகவரிக்கு ஆக்ஷேபனை செய்தனர். எனினும் அதிகாரிகள், அவ்வரியை விதித்து வசூல் செய்ய வாரம்பித்தனர். இதனால் ஜனங்கள் வெகுண்டு 14-7-31 இல் கலகம் செய்யத் துவக்கினர். ரீஜின்ஸி தலைவர் ஸ்ரீ ராகவையாவின் விடுதியும், சில நிர்வாக நிலயங்களும் தாக்கப்பெற்றுத் தீ வைக்கப்பட்டன. பிறகு கலகம் வலிமையுற்றது. சிறைச்சாலையுள் கலகக்காரர்கள் சென்று கைதிகளை விடுவித்தனர். இப்படிக் கலகம் வலுக்கவே மாஜி திவான் ஸ்ரீமான் கணபதி சாஸ்திரிகள் தலையிட்டு ஒருவாறு கலகத்தை அடக்கினர். பலத்கார முறையிலாது கலகம் அடக்கப்பெற்றது" என்று தெரிகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
நேத்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா.

NANJANGUD TOOTH POWDER

மதுரை காஞ்சீபுரம்.

188927

KALANILAYAM.
REG. No., M 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

“ஜீவாமிருதம்”

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதறாஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T.N- சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

தமிழன்பர்களே! இவரைத் தெரியுமா?

இவரே தற்காலத் தந்தியையும், டெலிபோனையும் கிராமபோனையும், சினிமாவையும், மின்சார விளக்கையும் கண்டுபிடித்தவர். கம்பியில்லாத் தந்திக்கு வழிகாட்டியவர். ஏழைக் குடும்பத்தில் 1847-ல் பிறந்து, தாய் சொல்லிக்கொடுத்த கல்வியினால் பத்திரிகை விற்பவராயிருந்து எண்ணிலாப் புதுமைகளைச் செய்து அமெரிக்காவில் பெருஞ் செல்வராய்த் திகழும்,

தோமாஸ் ஆல்வா எடிசன்

இவருக்கு இப்போது வயது 84. இன்னும் ஊண் உறக்கமின்றிப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து வருகின்றார். இப்போது இலைகளினின்றும் ரப்பர் எடுக்க முயற்சிக்கின்றார். இவர் ஹென்ரி போர்டுக்கு நண்பர்.

இவரது வரலாறு படிக்கப்படிக்க இன்பந்தரும். ஆப்டோன் படங்களுடன் உயர்ந்த காகிதம் அழகிய கட்டடம். விலை ரூபா 1-4.

தபாற் செலவு அணா 4.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்.,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, [illegible]